ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்திரி இயற்றிய

ஸ்ரீபாத ஸப்ததீ



ॐ श्री गुरुभ्यो नमः ।

श्रीपादसप्ततिः -

नारायणभट्ट प्रणीता

ஸ்ரீபாத ஸப்ததி

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்திரி இயற்றியது

தமிழாக்கம்

பி.ஆர். கண்ணன்
வாஷி, புது மும்பாய்

வெளியீடு

ஸ்ரீ பகவான் நாம பப்ளிகேஷன்ஸ்

ஸ்ரீராம நாம வங்கியின் பிரச்சாரப் பிரசுரப்பிரிவு
ராம மந்திரம், 2 விநாயகம் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன் : 24893736

ஸ்ரீபாத ஸப்ததி

முன்னுரை

"ஸ்ரீபாத ஸப்ததி" என்ற பெயர் கொண்ட இப்புத்தகம் அம்பாளின் ஸ்ரீபாதங்களைப் பற்றிய 70 சுலோகங்களைக் கொண்டது. இதை எழுதியுள்ள கவி ஸ்ரீநாராயணீயம் எழுதிப் பிரசித்தி பெற்ற ஸ்ரீமேல்பத்தூர் நாராயண பட்டத்திரி ஆவார். அவர் பாதத்தில் ரோகத்தினால் சிரமப்பட்டு ஸ்ரீகுருவாயூரப்பனின் சன்னதியில் 1000 சுலோகங்களைக் கொண்ட ஸ்ரீநாராயணீத்தைப் பாடி பகவான் ஸ்ரீகிருஷ்ணன் அவற்றை ஆமோதித்து தலையசைத்து கடைசியில் தன்னுடைய ரோக நிவிருத்தி ஆகி, பகவானின் பூரண அனுக்ரஹத்திற்குப் பாத்திரரான வரலாறு மிகப் பிரசித்தம். அதன் பிறகு சரீர ரோகம் நிவிருத்தி ஆனாலும் கூட ஸ்ரீபட்டத்திரிக்கு பூர்ணமான மனச்சாந்தி இல்லாமல் வெகு காலம் சிரமப்பட்டதாக தெரிகிறது. ஸ்ரீகுருவாயூரப்பன் அவருடைய கனவில் தோன்றி முக்திஸ்தலம் என்கிற க்ஷேத்திரத்தில் இருக்கும் ஸ்ரீதுர்க்கையை தரிசித்து ஸ்தோத்திரம் செய்தால் மனச்சாந்தி கிடைக்கும் என்று அருளினாராம். அதன்படி ஸ்ரீநாராயண பட்டத்திரியும் முக்தி ஸ்தலம் (இதனை முக்கோளக்கா என்று கேரளத்தில் சொல்கிறார்கள்) சென்று ஸ்ரீதுர்க்கையின் ஸ்ரீபாதாரவிந்தங்களை "ஸ்ரீபாத ஸப்ததி" என்கிற 70 சுலோகங்களின் மூலம் பாடி பிரார்த்தித்து பரவசமாகி அதீதமான மன ஸந்தோஷத்தைப் பெற்றார். அந்த ஸ்தலத்திலேயே தன் இறுதி நாட்களைக் கழித்து முக்தியும் பெற்றார்.

"ஸ்ரீபாத ஸப்ததி" யில் உள்ள 70 சுலோகங்களிலும் தேவி பராசக்தியின் ஸ்ரீபாதங்களின் உத்கர்ஷம், எல்லையில்லா அழகுடனும், அதிசயமான காவிய ரசத்துடனும், ஆழ்ந்த பக்தியுடனும் மிளிர்கிறது. ஸ்ரீபாத

வர்ணனை, நகங்களுடைய சோபை, ப்ரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் ஸ்ரீபாதங்களில் விழுந்து பிரார்த்தித்தல், இந்திராதி தேவர்கள், சூரிய சந்திரர்கள், ஆதிசேஷன் முதலிய தெய்வாம்சங்களுடைய பிரார்த் தனைகள், மகிஷாஸுர, சும்ப, நிசும்ப வத வைபவம், ஹிமயமலையில் பால லீலைகள், ஸ்ரீபரமேஸ்வரனுடன் விவாகம், பின்னர் பிரணய கலகம், எல்லாவற்றுக்கும் மேலாக பக்த வாத்ஸல்யம் இவைகளையெல்லாம் மிகவாக அனுபவித்துப் பாடியிருக்கிறார் ஸ்ரீபட்டத்திரி இந்த சிறிய புத்தகத்தில்.

ஸ்ரீபாதாரவிந்த பக்தியானது நம்முடைய பக்தி இலக்கியத்தில் அதிவிசேஷமானது. ஸத்குருவோ, ஸ்வாமியோ, தேவி பராசக்தியோ, அவர்களை விட கிருபையை அதிகமாக பக்தர்களிடம் வர்ஷிப்பவை அவர்களுடைய ஸ்ரீபாதங்கள். அவர்கள் பக்தர்களுடைய யோக்கியதையைப் பரிசீலிப்பது போல ஸ்ரீபாதங்கள் பரிசீலனை செய்யாமல், தங்களை சரண் புகுந்த பக்தர்களிடம் கருணை காட்டி ஆட்கொள்ளும் பான்மை உடையவை. தன்னிச்சையாக அருள் புரிய சக்தி வாய்ந்தவை. மோட்க்ஷ ஸாம்ராஜ்யத்தையே சுலபமாக அளித்து விடுபவை.

அப்பேர்ப்பட்ட தேவி ஸ்ரீபாத மகிமையை எடுத்துக் கூறும் ''ஸ்ரீபாத ஸப்ததிக்கு'', கேரளத்தைச் சேர்ந்த ஸ்ரீமுரியில் நாராயணன் நம்பீசன் என்கிற ஸமஸ்கிருத மகா வித்துவான் ஸமஸ்கிருத பாஷையில் வெகு அழகாக, வெகு ஆழமான அர்த்தங்களுடன் வியாக்கியானம் எழுதியுள்ளார். இவர் ஆயுர்வேத வைத்தியராக இருந்து கொண்டே சிறந்த தேவி பக்தராகவும், ஸாகித்திய கர்த்தாவாகவும் இருந்திருக்கிறார்.

ஸ்ரீபாத ஸப்ததிக்கு மாலிகா என்று சொல்லப்படுகிற மேற்சொன்ன வியாக்கியானத்துடன் இருக்கும் புத்தகத்தின் முன்னுரையில் திருவனந்தபுரம் ஸ்ரீஎஸ். வைத்தியநாதய்யர்

கூறுவதாவது:

''ஸ்ரீமேல்பத்தூர் நாராயண பட்டத்திரி தன் வாழ்க்கையின் கடைசி நாட்களில் எழுதியுள்ள இந்நூல், ஸ்ரீநாராயணீயத்தைப் போல் பிரசித்தமில்லாத போதும், ஆழம் அமைதி முதலிய குணங்களால் அதனை விட உயர்ந்ததாக இருக்கிறது.''

''ஸ்ரீபாத ஸப்ததி''யை தமிழ் மக்கள் படித்து அர்த்தத்தையும் காவிய ரசத்தையும் அனுபவித்து, தேவி பராசக்தியின் ஸ்ரீபாத கமலங்களில் இடையறாத பக்தியைப் பெற வேண்டும் என்கிற ஆசையில், இந்த புத்தகத்தில் உள்ள ஸமஸ்கிருத ஶ்லோகங்களுக்கு ஸ்ரீநம்பீசனின் ஸமஸ்கிருத வியாக்கினாத்தின் அடிப்படையில் என் சிற்றறிவைக் கொண்டு தமிழில் அர்த்தத்தை எழுதியுள்ளேன். இந்த மொழி பெயர்ப்பை அம்பாளின் ஸ்ரீபாத கமலங்களில் ஸமர்ப்பிக்கிறேன்.

இப்புத்தகத்தை மிக அழகான முறையில் அச்சிட்டுப் பிரசுரித்துள்ள ஸ்ரீபகவன்னாம பப்ளிகேஷன்ஸாருக்கும், முக்கியமாக ஸ்ரீஏகாம்பரத்திகும், மற்றும் அதற்கு பெரிதும் உதவிய மும்பாய் ஸ்ரீ ஜி.பாலசுப்ரமணியம், ஸ்ரீ கே.எம். நாராயணராவ் முதலிய அன்பர்களுக்கும் என் மனப்பூர்வமான கிருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாஷி
புதிய மும்பாய்
1.1.1997

பி.ஆர். கண்ணன்

ॐ श्री गुरुभ्यो नमः ।

श्रीपादसप्ततिः -

नारायणभट्ट प्रणीता

ஸ்ரீநாராயண பட்டத்திரி இயற்றிய

ஸ்ரீபாத ஸப்ததி

1. यत् संवाहनलोभिनः शशिकलाचूडस्य हस्ताम्बुज-
स्पर्शेनापि च लोहितायति मुहुस्त्वत्पादपङ्केरुहम् ।
तेनैवोद्धरकासरासुरशिरश्शृङ्गाग्रसञ्चूर्णन-
प्राचण्ड्यं तदनुष्ठितं किल कथं मुक्तिस्थलस्थे शिवे ॥

யத்ஸம்வாகனலோபின: சசிகலாசூடஸ்ய ஹஸ்தாம்புஜ
ஸ்பர்சேனாபிச லோஹிதாயதி முஹுஸ்த்வத்பாத பங்கேருஹம்
தேனைவோத்தரகாஸராஸுரசிரச்சிருங்காக்ரஸஞ் சூர்ணன
ப்ராசண்ட்யம் ததனுஷ்டிதம் இல கதம் முக்திஸ்தலஸ்தேசிவே

முக்திஸ்தலத்தில் ✸ வாசம் செய்யும் மங்களாம்பிகையே! சந்திரனை சிரஸில் தரித்துள்ள ஸ்ரீபரமேஸ்வரன் உன் ஸ்ரீபாதாரவிந்தத்தைத் தாங்கப் பேராவல் கொண்டவராய் தன் கமலம் போன்ற கையினால் உன் ஸ்ரீபாதத்தை ஸ்பரிசிக்கும் போது உன் ஸ்ரீபாதம் சிவந்து போகிறது.

அப்பேர்ப்பட்ட உன் ஸ்ரீபாதமானது மலையை விடப் பெரிய சரீரங்கொண்ட மகிஷாஸுரனுடைய தலையைப் பொடிப் பொடியாக்கியது பிரசித்தம். இது எவ்வாறு?

✸1) முக்திஸ்தலம் என்ற க்ஷேத்திரத்தில் பிரகாசிப்பவள்

2) முக்திக்குத் தகுதி வாய்ந்த பெரியோர்களின் ஹ்ருதயத்தில் வசிப்பவள்.

3) மாயையாகிற அவித்யையைப் போக்கும் பிரம்ம வித்யை சொரூபமாக இருப்பவள் என்று பல அர்த்தங்கள் கொள்ளலாம்.

2. त्वत्पादं निजमस्तके घटयितुं लोके न के के जनाः
किं किं नारचयन्ति दुश्चरतपश्चर्यासपर्यादिकम् ।
मन्ये धन्यतमं तु देवि महिषं वैरस्थयैव त्वया
यन्मूर्ध्नि स्वयमेव पातकहरं पादाम्बुजं पातितम् ॥

த்வத்பாதம் நிஜமஸ்தகே கடயிதும் லோகே ந கே கே ஜனா:
கிம் கிம் நாரசயந்தி துஸ்சரதபஸ்சர்யாஸபர்யாதிகம்
மன்யே தன்யதமம் து தேவி மகிஷம் வைர்தயைவ த்வயா
யன் மூர்துனி ஸ்வயமேவ பாதகஹரம் பாம்புஜம் பாதிதம்

தேவியே! ஜனங்கள் உன்னுடைய ஸ்ரீபாதார விந்தங்கள் தங்கள் சிரஸின் மீது தாங்கக் கிடைப்பதற்காக மிகக் கடுமையான தபஸ், பூஜை முதலிய என்னென்னவோ காரியங்களையெல்லாம் மேற்கொள்ளுகிறார்கள். ஆனால் மகிஷாஸுரனோ உன்னுடைய பரம விரோதியாக இருந்தான். இருந்தும் நீயோ ஸர்வ பாபங்களையும் போக்கும் உன் ஸ்ரீபாத கமலத்தை நீயாகவே அவனுடைய சிரஸின் மீது வைத்தாய். அந்த மகிஷாஸுரனல்லவோ மகா பாக்கியசாலி.

இங்கு 'கே கே ஜனா' என்று சொல்லியிருக்கிறபடியால் மனுஷ்யர்களைத் தவிர தேவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் முதலானவர்களையும் சேர்த்துக் குறிப்பிட்டதாக ஆகும்.

3. त्वत्पादाम्बुजमर्पितं क्व नु शिवे किं नु त्रयीमस्तके
नित्यं तत्वविचारदत्तमनसां चित्ताम्बुजाग्रेषु वा ।
किं वा त्वत्प्रणयप्रकोपविनमन्मारारिमौलिस्थले
किं प्रोत्खण्डितघोरसैरिभमहादैत्येन्द्रमूर्धान्तरे ॥

த்வத்பாம்புஜமர்ப்பிதம் க்வநு சிவே கம் நு த்ரயீமஸ்தகே
நித்யம் தத்வ விசாரதத்தமனஸாம் சித்தாம்புஜாக்ரேஷு வா
கிம் வா த்வத்ப்ரணயப்ரகோபவினமன் மாராரிமௌலிஸ்தலே
கிம் ப்ரோத்கண்டித கோரஸைரிப மகாதைத்யேந்த்ர
மூர்த்தாந்தரே

மங்களாம்பிகையே! உன் ஸ்ரீபாத கமலங்கள் எங்கு இருக்கின்றன? தேவர்களுடைய சிரஸாகிற உபநிஷத்துக்களிலா?✵ அல்லது தத்வ ஆராய்ச்சியில் மனஸைப் பறி கொடுத்த யோகிகளின் ஹ்ருதய கமலங்களிலா?

அல்லது மன்மதனைச் சாம்பலாக்கிய ஸ்ரீபரமேஸ்வரன் பிரணய கலகத்தின் போது உன் ஸ்ரீபாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கும் போது அந்த ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸின் மீதா? அல்லது மகா பயங்கரமான மகிஷாஸுரனுடைய வெட்டப்பட்ட சிரஸின் மீதா?

✵வேதங்களுக்கு சிரஸாக பிரணவமாகிற ஓங்காரத்தையும் கொள்ளலாம்.

4. त्वत्पादाञ्चलरूपकल्पलतिकाबालप्रवालद्वयं
ये तावत् कलयन्ति जातु शिरसा नम्रेण कम्रोज्जवलम् ।
तेषामेव हि देवि नन्दनवनक्रीडासु लभ्यं पदं
स्वर्वल्लीतरुणप्रवालभरणं सेवानुरूपं फलम् ॥

த்வத்பாதாஞ்சலரூபகல்பலதிகா பாலப்ரவாலத்வயம்
யே தாவத் கலயந்தி ஜாது சிரஸா நம்ரேண கம்ரோஜ்வலம்
தேஷாமேவ ஹி தேவி நந்தனவனக்ரீடாஸுஸ் லப்யம் பதம்
வர்வல்லீதருணப்ரவாலபரணம் ஸேவானுரூபம் பலம்

தேவியே! உன் ஸ்ரீபாதங்களின் முன் பாகம் அதிசுந்தரமாகவும் பிரகாசமாகவும், தேவலோகத்துக் கல்பகக் கொடியின் மொட்டுக்களைப் போன்று (மென்மையுடனும், வேண்டியவற்றைத் தரவல்லவையாகவும்) இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட

ஸ்ரீபாதங்களை வணக்கத்துடன் தங்கள் சிரஸின் மீது யார் தரிக்கின்றார்களோ அவர்கள் (ஸ்வர்க்கத்தை வேண்டுபவர் களாயிருந்தால்) ஸ்வர்க்கத்தில் நந்தவனங்களில் கல்பகக் கொடி போன்ற தேவ கன்னிகைகளுடன் ஆனந்திக்கிறார்கள். அதாவது, பக்திக்குத் தக்க பலனை உன் ஸ்ரீபாதகமலம் அளிக்கிறது. (கல்பகக் கொடி போன்ற ஸ்ரீபாதங்களை நமஸ்கரித்ததன் பலன், ஸ்வர்க்கத்திற்கே கொண்டு சென்று, கல்பகக் கொடி போன்ற கன்னிகைகளுடன் ஸ்வர்க்க ஆனந்தத்தை அளிக்கிறது)

★ மோக்ஷத்தை வேண்டுபவர்களுக்கு மோக்ஷம் சித்திக்கும். வேண்டுவது கிடைக்கும் என்பது தாத்பரியம்.

5. धावल्यं परिलाल्यते पुररिपोरङ्गेन तुङ्गश्रिया
किञ्च श्यामलिमापि कोमलतरे भात्येव गात्रे हरेः ।
तत्तादृक्पदवीं ममापि जनयेदस्तोकसेवारसा–
दारुण्यं तव लीयते चरणयोः कारुण्यमूर्ते शिवे ॥

தாவல்யம் பரிலால்யதே புரரிபோரங்கேன துங்கச்ரியா
கிஞ்ச ச்யாமலிமாபி கோமலதரே பாத்யேவ காத்ரே ஹரே:
தத்தாத்ருக்பதவீம் மமாபி ஜனயேதஸ் தோகஸேவாரஸா –
தாருண்யம் தவ லீயதே சரணயோ: காருண்யமூர்த்தே சிவே

கருணாமூர்த்தியே! மங்களாம்பிகையே! திரிபுராந்தகனான (முப்புரம் எரித்தவனான) ஸ்ரீபரமேஸ்வரனின் சரீரத்தினுடைய உத்தமமான ஒளியினால் வெண்மை நிறமானது சோபையை அடைகிறது. ஸ்ரீஹரியினுடைய மிகவும் மிருதுவான சரீரத்திலோ, நீலமேகச்யாமள வர்ணமானது பிரகாசிக்கிறது.

சிவப்பு நிறமோ, உன் பாதங்களிலே மகத்தான சேவை செய்வதினால், எனக்கு சிவ விஷ்ணு போன்ற பதவியைத்தந்த விடத் தான் போகிறாய் என்று உன் பாதங்களிலேயே லயமாகி விடுகிறது.★

★உன் ஸ்ரீபாதங்களை நான் இறுகப் பற்றிக் கொண்டிருப்பதினால் சிவப்பு நிறமானது மறைந்து விடுகிறது. காரணம், சிவப்பு நிறத்திற்கு தெரியும்! நீ சிவ, விஷ்ணு போன்ற பதவியை எனக்குத் தரப் போகிறாய் என்று.

6. आरुण्यं तदिदं त्वदीयपदयोराभाति तत् केचन
प्राहुस्तुङ्गनितम्बभारभरणक्लान्त्या किलोपागतम् ।
अन्ये माहिषमूर्धपेषमिलितं रक्तद्रवं मन्वते
मन्येऽहं तु नतेषु सान्द्रमनुरागोद्गारमेवानयोः ॥

ஆருண்யம் ததிதம் த்வதீய பதயோராபதி தத் கேசன
ப்ராஹுஸ்துங்கநிதம்பபரா பரணக்லாந்த்யா கிலோபாகதம்
அன்யே மாகிஷமூர்த்தபேஷமிலிதம் ரக்தத்ரவம் மன்வதே
மன்யேஹம் து நதேஷு ஸாந்த்ரமனுராகோத்காரமேவானயோ:।

சங்கரியே! உன் ஸ்ரீபாத கமலங்களில் இந்த சிவப்பு வர்ணமானது பிரகாசிப்பது எப்படி? சிலர் சொல்வர், உன்னுடைய பெருத்த பின்பாகங்களின் கனத்தைத் தாங்கும் சிரமத்தினால் பாதங்கள் சிவந்தன என்று. வேறு சிலரோ மகிஷாஸுரனுடைய சிரஸின் மீது உன் ஸ்ரீபாதத்தை வைத்து அதனைப் பொடி பொடியாக்கிய போது அவனுடைய ரத்தம் உன் பாதங்களில் படிந்ததினால் அவை சிவந்தன என்று சொல்வர். ஆனால் நானோ உன் ஸ்ரீபாதங்களில் பக்தியுடன் நமஸ்கரிக்கின்றவர்களின் மீது ஏற்பட்ட பரிபூர்ணமான அன்பினுடைய வெளிப்பெருக்கு தான் இந்த சிவப்பு வர்ணம் என்று நினைக்கிறேன்.

7. प्राहुः पद्मसामाश्रयं शतधृतिं त्वत्पादपद्माश्रया–
दन्तस्त्वत्पदपद्मवीक्षणवशात् कृष्णोऽपि पद्मेक्षणः ।
यत्पद्मार्चनमामनन्ति सुधियो दारिद्र्यविद्रावणं
मुक्तिक्षेत्रगते भवानि तदपि त्वत्पादपद्मार्चनम् ॥

ப்ராஹு: பத்மஸமாச்ரயம் சதத்ருதிம் த்வத்பாத பத்மாச்ரயா -
தந்தஸ்த்வத்பதபத்ம வீக்ஷணவசாத் கிருஷ்ணோபி பத்மேக்ஷண:
யத்பத்மார்ச்சனமாமனந்தி ஸுதியோ தாரிதர்ய வித்ராவணம்
முக்திக்ஷேத்ரகதே பவானி ததபி த்வத்பாத பத்மார்ச்சனம்

முக்திக்ஷேத்திரத்தில் வாசம் செய்யும் பவானியே! (பவன் அதாவது பரமேஸ்வரன், அவருடைய பத்தினியே!) உன் ஸ்ரீபாதங்களைச் சரணடைந்ததால் பிரம்மா கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரம்ம பதவியை அடைந்தார். ஸ்ரீக்ருஷ்ணனும் உன் ஸ்ரீபாத கமலங்களை மனதிற்குள் ஸதா தரிசனம் செய்து கொண்டிருந்ததினால் கமலக் கண்களைப் பெற்றார். எந்த ஸ்ரீபாதகமலங்களில் அர்ச்சனை செய்து ஸ்ரீலக்ஷ்மியே தரித்திரத்தை விரட்டும் சக்தியைப் பெற்றிருக்கிறாரோ, அப்பேர்ப்பட்ட உன் ஸ்ரீபாதங்களில் ஞானிகள் அர்ச்சனை செய்து எல்லா தரித்திரத்தையும் விரட்டி ஸத்கதியை அடைகின்றனர்.

8. पादं ते सरसीरुहद्रुहमिमं यत् सेवते पद्मभू–
नूनं तत् स्वनिवासपङ्कजतरश्रीलङ्घनाशङ्कया ।
गोविन्दोऽपि च वारिराशिदुहितुर्वासाब्जबाधाभिया
स्वस्यैवाग्रकरोद्गृहीतकमलत्राणाभिलाषेण वा ॥

பாதம் தே ஸரஸீருஹத்ருஹமிமம் யத்ஸேவதே பத்மபூர்
நூநம் தத் ஸ்வநிவாஸ பங்கஜவரஸ்ரீலங்கநாசங்கயா
கோவிந்தோ பிச வாரிராசிதுஹிதுர்வாஸாப்ஜபாதாபியா
ஸ்வ்யைவாக்ர கரோத்கிருஹீதகமலத்ராணா பிலாஷேணவா

தேவியே! கமலங்களைப் பழிக்கும் உன் பாதங்களை ஸ்ரீநாராயணின் நாபி கமலத்தில் உதித்த பிரம்மா பஜிப்பது எதற்காக? தன் வாசஸ்தலமான உயர்ந்த கமலத்தின் சோபை அபகரிக்கப்பட்டு விடுமோ என்ற பயத்தில்தான். ஸ்ரீகோவிந்தன் பஜிப்பது எதற்காக? சமுத்திர புத்திரியான லக்ஷ்மியின் வாசஸ்தலமான கமலத்திற்கு உபத்திரவம் ஏற்படுமோ என்கிற பயத்திலா? அல்லது தன்னுடைய

கையிலிருக்கும் (திவ்ய) கமலத்தைப் பாதுகாக்கும் ஆசையினாலா?

✱மற்ற மூன்று கமலங்களின் சோபையைத் தகர்க்கும் சக்தியிருந்தும், பக்தவாத்ஸல்யத்தால் ஸ்ரீபாதங்கள் அந்த கமலங்களின் சோபையைக் குறைவு படுத்தாமல் அநுக்ரஹம் செய்கின்றன என்று தாத்பரியம்.

9. सेवन्ते कुलसम्पदे नखमयाः शीतांशवस्त्वत्पदं
तत्पाको ननु वीक्ष्यते हि नितरामन्येषु शीतांशुषु ।
एको बालक एव मौलिमयि ते यातो ललाटात्मता–
मन्यो निर्मलगण्डमण्डलदशामन्यौ तु धन्यौ गतौ ॥

ஸேவந்தே குலஸம்பதே நகமயா: சீதாம்சவஸ்த்வத்பதம்
தத்பாகோ நநு வீக்ஷ்யதே ஹி நிதராமன்யேஷு சீதாம்சுஷு
ஏகோ பாலக ஏவ மௌலிமயி தே யாதோ லலாடாத்மதா
மன்யோ நிர்மல கண்ட மண்டல தசாமன்யௌ து தன்யௌ கதௌ

பகவதியே! குளிர்ந்த கிரணங்களை வீசும் சந்திரன் உன் ஸ்ரீபாத நகங்களாக இருந்து கொண்டு உன் ஸ்ரீபாதங்களைப் பஜித்ததினால் தன குல விருத்தியை அடைந்தான்.✱ அந்த ஸ்ரீபாத பக்தியின் புண்ய பரிபாகம் நிதர்சனமாகவே தெரிகிறது எப்படி?

ஒரு பாலசந்திரனோ, உன் சிரஸை அலங்கரிக்கிறான். இன்னொரு பாலசந்திரனோ உன் நெற்றியாகவே ஆகி விட்டான். மற்றும் இரண்டு பாலசந்திரர்கள் பரிசுத்தமான உன் கன்னப் பிரதேசங்களாகவே ஆகி விட்டனர். அவர்கள் பாக்கியசாலிகள்.

✱அதாவது சில சந்திரர்கள் உன் ஸ்ரீபாதங்களை பஜித்ததன் பலனாக உன் ஸ்ரீபாத ஸாயுஜ்யத்தை (ஸ்ரீபாதத்தின் அங்கமாகிற நகங்களாகவே ஆகி) அடைந்தனர். அவர்களுடைய புண்ய விசேஷத்தினால் அவர்களுடைய ஸந்ததிகளாகிய சந்திரர்கள் பிற்காலத்தில் சிரஸ் மீதும் நெற்றியாகவும் கன்னங்களாகவும் ஆகும் பாக்கியத்தைப் பெற்றனர் என்று தாத்பரியம்.

10. घोरं पादसहस्रकं प्रकटयन्नाशासु भासां पतिः
ध्वान्तं नो पुनरान्तरं शमयितुं शक्नोति शैलात्मजे ।
त्वत्पादद्वितयेन कोमलतरेणानेन चेतः स्पृशा
जन्तूनां बहिरन्तरन्धतमसं कृन्तस्यनन्तं शिवे ॥

கோரம் பாதஸகஸ்ரகம் பிரகடயன்னாசாஸு பாஸாம் பதிர் –
த்வாந்தம் நோ புனராந்தரம் சமயிதும் சக்நோதி சைலாத்மஜே
த்வத்பாதத்விதயேன கோமலதரேணானேன சேத: ஸ்பிருசா
ஜந்தூனாம் பகிரந்தரந்ததமஸம் கிருந்தஸ்யநந்தம் சிவே

ஹிமவானுடைய புத்திரியே! சூரியன் பல திசைகளிலும் ஆயிரக்கணக்கான அதிசக்தி வாய்ந்த (பாதங்களால்) கிரணங்களால் கூட ஜனங்களுடைய உள்ளிருக்கும் (அஞ்ஞானமாகிற) இருட்டைப் போக்க சக்தியற்றவனாகயிருக்கிறான்.

ஆனால் மங்கள அம்பிகையே! உன்னுடைய, பரம மிருதுவான, மனத்தினால் எப்போதும் தியானிக்க வேண்டிய இரு ஸ்ரீபாதங்களாலும் நீயோ ஜனங்களுடைய புறத்தேயும், அகத்தேயும் ★ இருக்கும் முடிவற்ற அந்தகாரத்தை நிர்மூலமாக விரட்டி விடுகிறாய்.

★தன்னை, தேகத்துடன் இணைத்துக் கொள்வது புறத்தே உள்ள இருட்டு தான் ஸச்சிதானந்த ஸ்வரூபமாகிய ஆத்மா இன்றி வேறில்லை என்ற அனுபவத்தை அடையாமலிருத்தல் அகத்தின் இருட்டு. வித்யை கைவரப் பெற்ற பின் அவித்யையானது, சூர்யனைக் கண்ட அந்தகாரத்தைப் போல் விலகி ஓடி விடுகிறது.

11. सूर्येन्द्वग्निसमीरणादिसकलस्वर्वासिनामुन्मदः
सर्वाण्येव पदानि यो मथितवान् दुर्वारशौर्योष्मणा ।
तं घोरं महिषासुरं निजपदेनैकेन सम्मृद्नती
यत्वं प्रत्यकृथास्ततः किमपरं त्वद्वैभवं ब्रूमहे ॥

சூர்யேந்த்வக்னிஸமீரணாதிஸகலஸ்வர்வாஸிநா முன்மத:
ஸர்வாண்யேவ பதானி யோ மதிதவான்
துர்வாரசௌர்யோஷ்மணா

தம் கோரம் மகிஷாஸுரம் நிஜபதேனைகேன ஸம்மிருத்நதீ
யத்வம் ப்ரத்யக்ருதாஸ்தத: கிமபரம் த்வத்வைபவம் ப்ரூமஹே

சிவே! மகிஷாஸுரன் பிறரால் வெல்ல முடியாத தன்னுடைய மிகுந்த பராக்கிரமத்தினால் உன்மத்தனாக ஆகி, ஸ்வர்க்கத்திலுள்ள சூரியன், சந்திரன், அக்கினி, வாயு முதலிய எல்லா தேவதைகளுடைய பதவிகளைப் பறித்துத் துன்புறுத்தினான். நீயோ உன் ஒரே ஸ்ரீபாதத்தினால் அப்போேர்ப்பட்ட பயங்கரமான மகிஷாஸுரனை அழித்து அவனுக்கு தக்க பதிலடி கொடுத்தாய். அதன் பிறகு (வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத) உன்னுடைய வேறு எந்த வைபவத்தை என்னால் எடுத்துரைக்க முடியும்?

12. एकं वामतयैव दक्षिणतयैवान्यत् पदं देहिनां
ख्यातं मुक्तिपुराधिवासिनि शिवे चित्रं त्वयि त्वीदृशम् ।
आनम्रेषु जनेष्वभीष्टकरणे पादावुभौ दक्षिणा-
वानम्रे तु कृतागसि स्मरहरे वामाक्षि वामावुभौ ॥

ஏகம் வாமதயைவ தக்ஷிணதயைவான்யது பதம் தேஹினாம்
க்யாதம் முக்திபுராதிவாஸிநி சிவே சித்ரம் த்வயி த்வீதிருசம்
ஆனம்ரேஷு ஜனேஷ்வபீஷ்டகரணே பாதாவுபௌ தக்ஷிணா
வானம்ரே து க்ருதாகஸி ஸ்மரஹரே வாமாக்ஷி வாமாவுபௌ

முக்திஸ்தலவாஸினியும் மங்களங்களை அருளும் அம்பிகையே! ஸகல ஜனங்களுக்கும் இரண்டு பாதங்கள் உண்டு. ஒன்று வலது (தக்ஷிணம்) மற்றது இடது (வாமம்) என்று எல்லோருக்கும் பிரசித்தி. உன்னுடைய இரு பாதங்களின் விஷயத்திலோ இது ஆச்சரியமாக வேறுபட்டிருக்கிறது.

வாமாக்ஷியே! (அழகிய கண்களை உடையவளே) உன் இரு பாதங்களுமே பக்த ஜனங்கள் நமஸ்கரிக்கும் போது தக்ஷிணர்களாக (கொடை வள்ளல்களாக) இருக்கின்றன. ஆனால் மன்மதனை எரித்த ஸ்ரீபரமேஸ்வரன் (பிரணய கலகத்தின் போது) குற்றம் செய்தவராக உன் ஸ்ரீபாதங்களில் தலை வணங்கும் போது உன் ஸ்ரீபாதங்கள் இரண்டுமே வாமமாக ✱ கொடுக்க இஷ்டமில்லாமல் (கோணல் மனங் கொண்டவைகளாக) இருக்கின்றன.

*வாமம், தக்ஷிணம் என்ற இரு வார்த்தைகளை அழகிய சிலைடையுடன் கவி கையாண்டிருப்பதை நோக்கவும்.

13. आनम्रस्य पुरद्रुहः शिरसि ते पादाब्जपातः शिवे
जीयाद्येन बभूव पङ्कजवती मौलिस्स्रवन्ती क्षणम् ।
किञ्चोदञ्चितबालपल्लववती जाता जटावल्लरी
लाक्षापादवशेन सान्ध्यसुषमासान्द्रा च चान्द्री कला ॥

ஆநம்ரஸ்ய புரத்ருஹ: சிரஸி தே பாதப்ஜபாத: சிவே
ஜீயாத்யேன பபூவ பங்கஜவதீ மௌலிஸ்ரவந்தீ க்ஷணம்
கிஞ்சோதஞ்சிதபாலபல்லவ வதீ ஜாதா ஜடாவல்லரீ
லாக்ஷாபாதவசேன ஸாந்தியஸுஷமாஸாந்திரா ச சாந்திரீ கலா

சிவே! திரிபுரங்களை எரித்த ஸ்ரீபரமேஸ்வரன் (பிரணய கலகத்தின் போது) தலை வணங்கும்போது உன் ஸ்ரீபாத கமலங்கள் அவருடைய தலையின் மீது வீழ்த்தப்பட்டன. அது நன்றே. ஏனெனில் அப்போது ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸின் மீது இருக்கும் கங்கையில் (செந்) தாமரை மலர் புஷ்பித்ததைப் போன்று ஆயிற்று.

மேலும் சிரஸின் மீதுள்ள ஜடையில் உன் ஸ்ரீபாதங்களுடைய விரல்கள் சிறிய மொட்டுடன் கூடிய குருத்துக்களைப் போன்று சோபையைக் கொடுக்கின்றன. மற்றும் சிரஸின் மீதுள்ள சந்திர கலையோ உன் ஸ்ரீபாதங்களின் செம்பஞ்சுக் குழம்பின் செந்நிறத்துடன் சேர்ந்து மிக அழகான சந்தியாகாலத்து செந்நிறச் சந்திரன் போன்று தோற்றமளிக்கிறது.

14. दृष्ट्वा रात्रिषु चन्द्रपादजनितां पाथोरुहाणां व्यथां
देवि त्वं करुणाकुलेव कुरुषे तद्वैरनिर्यातनम् ।
मानानम्रमहेशमौलिवलभीवासस्य शीतत्विषो
नित्यं पङ्कजपादघातजनिता बाधा यदाधीयते ॥

த்ருஷ்ட்வா ராத்ரிஷு சந்திரபாதஜனிதாம் பாதோருஹாணாம் வ்யதாம்
தேவி த்வம் கருணாகுலேவ குருஷே தத்வைர நிர்யாதனம்
மானாநம்ரமகேச மௌலிவலபீவாஸஸ்ய சீதத்விஷோ
நித்யம் பங்கஜ பாதகாத ஜனிதா பாதா யதாதீயதே

தேவியே! ராத்திரி வேளையில் சந்திரனுடைய (பாதங்களினால்) கிரணங்களினால் தாமரை மலர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுவதைப் பார்த்து நீ கருணையினால் சந்திரனைப் பழி வாங்க நினைக்கிறாய்.

அதனால் பிரணய கலகத்தின் போது தலை வணங்கும் ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸின் மீது வசிக்கும் சந்திரனை உன் கமலம் போன்ற ஸ்ரீபாதத்தினால் அடித்து அந்த சந்திரனுக்கு துன்பத்தைக் கொடுக்கிறாய்.

15. सम्भ्रान्तिस्तव देवि सा विजयते मानावनम्रे शिवे
त्वत्पादाम्बुरुहप्रहारमुदिते मन्दं समुत्थायिनि ।
लाक्षारागरसारुणं निपतितं गङ्गापयश्शीकरं
दृष्ट्वा शोणितशङ्कया तरलिता कान्तं यदालम्बथा: ॥

ஸம்பிராந்திஸ்தவ தேவி ஸா விஜயதே மானாவனம்ரே சிவே
த்வத் பாதாம்புருகப்ரஹாரமுதிதே மந்தம் ஸமுத்தாயினி
லாக்ஷாராக ரஸாருணம் நிபதிதம் கங்காபயச்சீகரம்
த்ருஷ்ட்வா சோணிதசங்கயா தரலிதா காந்தம் யதாலம்பதா:

தேவியே! உனக்கும் ஸ்ரீபரமேஸ்வரனுக்கும் பொறாமையினால் கோபம் ஏற்பட்டு ஸ்ரீபரமேஸ்வரன் உன் ஸ்ரீபாதங்களில் தலை வணங்கும் போது உன் ஸ்ரீபாத கமலத்தை அவருடைய சிரஸின் மீது நீ வீழ்த்தி அதனால் அவர் சந்தோஷமடைந்து மெதுவாக தலையைத் தூக்கி எழுந்திருக்கிறார்.

அப்போது ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸின் மீதுள்ள கங்கையின் சில ஜலத்துளிகள் கீழே விழுகின்றன. உன் ஸ்ரீபாதத்தின் லாக்ஷாரஸத்தின் செந்நிறம் அந்த ஜலத்துளிகளில் சேர்ந்து ரத்தம் போன்று தோன்றுகிறது.

ரத்தாம் தானோ என்ற பயத்தில் மனங்கலங்கி நீ உன் மணாளனை ஆலிங்கனம் செய்து கொள்கிறாய். அப்போது உன் புத்தி மயக்கமானது வெற்றி பெறுகிறது.✱

✱ அதாவது புத்தி மயக்கம் வேறு எந்த கட்டத்திலும் ஏற்படாத உனக்கு இந்த ஒரு தடவை ஏற்பட்டு விட்டதே என்று புத்தி மயக்கத்திற்குக் கொண்டாட்டம் என்பது தாத்பரியம்.

16. सा पादद्वितयाहतिर्जयति ते यस्यां गिरीन्द्रात्मजे
प्राचीनेन्दुयुते नखेन्दुदशके मौलिस्थलीसङ्गते ।
स्वस्यैकादशमूर्तितासमुचितानेकादशैवोडुपा–
नाबिभ्राण इवाबभौ स भगवानेकोऽपि रुद्रः स्वयम् ॥

ஸா பாதத்விதயாஹதிர்ஜயதி தே யஸ்யாம் கிரீந்த்ராத்மஜே
ப்ராசீனேந்துயுதே நகேந்துதசகே மௌலிதலீஸங்கதே ச
ஸ்வஸ்யைகாதச மூர்த்திதாமுசிதாஸநேகாதசை வோடுபா
நாபிப்ராண இவாபபௌ ஸ பகவானேகோபி ருத்ர: ஸ்வயம்

ஹிமவானுடைய புத்திரியே! பிரணய கலகத்தில் ஸ்ரீபரமேஸ்வரன் நமஸ்கரிக்கும் போது உன் இரு ஸ்ரீபாதங்களையும் அவருடைய சிரஸின் மீது வைக்கிறாய். அப்போது உன் ஸ்ரீபாத நகங்களாகிய பத்து பாலசந்திரர்களுடன் ஏற்கனவே நிரந்தரமாக ஸ்ரீபரமேஸ்வரனின் சிரஸின் மீது இருக்கும் ஒரு பாலசந்திரனையும் சேர்த்து மொத்தம் பதினொரு பாலசந்திரர்கள் அவருடைய சிரஸை அலங்கரிக்கின்றன. பகவான் ஸ்ரீபரமேஸ்வரன் (இரண்டற்றவராக) ஒருவரேயானாலும், தானே பதினொரு ருத்ர மூர்த்திகளாக விளங்கும் போது மொத்தம் பதினொரு பாலசந்திரர்கள் உண்டு என்பதால், இந்த சந்தர்ப்பத்தில் அவர் அந்த ஏகாதச ருத்ர வடிவத்தில் ஏகாதச சந்திரர்களைத் தாங்கி சோபிக்கிறார் போலிருக்கிறது.

17. किं वैरिञ्चिकरोटिकोटिनिहतं किं वा फणिग्रामणी-
निः श्वासानिलखेदितं त्विदमिति प्रेम्णाभिसल्लापिना ।
मानस्योपशमे करेण शनकैरामृद्नता शम्भुना
भूयश्चुम्बितमम्बुजद्युति पदं ध्यायामि माये तव ॥

கிம் வைரிஞ்சிகரோடி கோடிநிஹதம் கிம்வா பணிக்ராமணீ
நிச்வாஸாநிலகேதிதம் த்விதமிதி ப்ரேம்ணாபிஸல்லாபினா
மானஸ்யோபசமே கரேண சனகைராம்ருத்னதா சம்புனா
பூயஸ்சும்பிதமம்புஜத்யுதி பதம் த்யாயாமி மாயே தவ

மாயாஸ்வரூபிணியே! ✱பிரணய கோபம் தணிந்து உன்னோடு அன்புடன் ஸல்லாபிக்க ஆசை கொண்ட ஸ்ரீபரமேஸ்வரன் உன் ஸ்ரீபாத கமலங்களை மெதுவாகத் தூக்குகிறார். அப்போது சிவந்திருக்கும் உன் ஸ்ரீபாதங்களைப் பார்த்து சிவபெருமான் நினைக்கிறார். தன்னுடைய சிரஸின் மீதிருக்கும் பிரம்மாவினுடைய கபாலத்தின் ✱✱ நுனி உன் ஸ்ரீபாதத்தில் பட்டதினாலோ அல்லது தன் சரீரத்தின் மீதிருக்கும் ஸர்ப்பராஜனான சேஷனுடைய சுவாசக் காற்றினாலோ என்று சிவன் உன் ஸ்ரீபாதங்களை மறுபடியும் முத்தமிடுகிறார். அதனால் அந்த ஸ்ரீபாதகமலங்கள் மேலும் சிவந்து செந்தாமரை போன்று பிரகாசிக்கின்றன. அப்பேர்ப்பட்ட உன் ஸ்ரீபாதாரவிந்தங்களை நான் தியானிக்கிறேன்.

✱மாயையாகவும் மாயையைப் போக்கும் ஸ்ரீவித்யையாகவும் அம்பிகை இருப்பதனால் உன்னால் உண்டாக்கப்பட்ட இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடைக்க உன் ஸ்ரீபாத கமலங்களை தியானிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பது தாத்பரியம்.

✱✱சிவபெருமான் அளவிட முடியாத ஜோதி ஸ்வரூபமாகத் தோன்றிய போது பிரம்மா அந்த ஜோதியின் முடியைக் காண்பதற்காக அன்ன வடிவம் எடுத்துத் தேடச்

சென்றார். முடியைக் காண முடியாமல் திரும்பிய பிரம்மா தான் கண்டு விட்டதாக சிவபெருமானிடம் பொய் சொன்ன போது பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றை சிவன் தன் விரல் நகத்தின் நுனியால் கொய்து விட்டார். பின்னர் பிரம்மா நான்முகராக ஆனார். கொய்த தலையின் மண்டையோட்டை தன் சிரஸின் மீது சிவன் தரித்துக் கொண்டுள்ளதை கவி இங்கு குறிப்பிடுகிறார்.

18. पूर्वं जह्नुसुता सकृन्मुररिपोः श्रीपादसंक्षालनात्
पुण्यादीदृशवैभवा समभवद् गोविन्दवन्द्ये शिवे ।
सेयं सम्प्रति शम्भुमौलिनिलया मानप्रसङ्गानतौ
नित्यं त्वच्चरणावसेचनभुवा पुण्येन कीदृग्भवेत् ॥

பூர்வம் ஜஹ்னுஸுதா ஸக்ருன் முரரிபோ: ஸ்ரீபாதஸம்க்ஷாலனாத்
புண்யாதீத்ருசவைபவா ஸமபவத் கோவிந்தவந்த்யே சிவே
ஸேயம் ஸம்ப்ரதி சம்புமௌலிநிலயா மானப்ரஸங்கானதௌ
நித்யம் த்வச்சரணாவஸேசனபுவா புண்யேன கீத்ருக்பவேத்

ஸ்ரீகோவிந்தன் வணங்கும் அம்பிகையே! முன்பு ஒரு தடவை ஜஹ்னு மகரிஷியின் புத்திரியான கங்கை ஸ்ரீமகாவிஷ்ணுவின் ஸ்ரீபாதங்களை நனைத்த ✵ புண்ணியத்தினால் அந்த கங்கைக்கு இம்மாதிரியான (அதாவது மூன்று உலகங்களையும்) பரிசுத்தமாக்கும் வைபவம் கிடைத்தது.

இப்போது ஸ்ரீபரமேஸ்வரனின் சிரஸிலிருக்கும் கங்கை பிரணய கலகத்தில் அவர் உன் ஸ்ரீபாதங்களில் நமஸ்கரிக்கும் போது உன் ஸ்ரீசரணங்களில் ஸ்பரிசித்துக் கிடைக்கும் புண்ணியத்தினால் இன்னும் எந்த வைபவத்தை அடையப் போகிறது?

✵ஸ்ரீமகாவிஷ்ணு வாமனாவதாரத்தின் போது தன்னுடைய உயரத் தூக்கிய பாதத்தினால் விண்ணுலகை அளந்தார். பிரம்மாவின் ஸத்யலோகத்தில் வந்தடைந்த அந்த பாதத்திற்கு பிரம்மா தன் கமண்டலத்தின்

தீர்த்தத்தினால் பிரக்ஷாலனம் செய்தார். அப்போது கீழே விழுந்த அந்த தீர்த்தம் தான் கங்கையாக உருவெடுத்தது.

19. पूर्वं व्याकरणप्रपञ्चनविधौ लब्ध्वाप्यनेकं पदं
किं नो तृप्तिमगादगाधिपसुते शेषः फणिग्रामणीः ।
आलीनः शशिमौलिमूर्धनि चिरं प्रेमप्रकोपानतौ
लब्धुं ते पदमेकमेव कुतुकी नित्यं यतो वर्तते ॥

பூர்வம் வ்யாகரணப்ரபஞ்சன விதௌ லப்த்வாப்யனேகம் பதம்
கிம் நோ த்ருப்திமகாதகாதிபஸுதே சேஷ பணிக்ராமணீ:
ஆலீன: சசிமௌலிமூர்த்தனி சிரம் ப்ரேமப்ரகோபாநதௌ
லப்தும் தே பதமேகமேவ குதுகீ நித்யம் யதோ வர்ததே

ஹிமவானுடைய புத்திரியே! முன்பு ஸர்ப்பராஜனான சேஷன் (பதஞ்சலிரிஷியாக இருந்து கொண்டு) ஸம்ஸ்க்ருத வ்யாகரணத்திற்கு (அதாவது இலக்கணத்திற்கு) பாஷ்யம் எழுதி அநேக பதங்களை ✸ (அதாவது வார்த்தைகளை) உண்டு பண்ணினார். ஆனால் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை.

அதனால் சேஷன் சிவனுடைய சிரஸின் மீது மாலை வடிவத்தில் எப்பொழுதும் இருந்து கொண்டு சிவன் பிரணய கோபத்தில் நமஸ்கரிக்கும் போது உன்னுடைய ஒரு பதத்தை✸ (அதாவது ஸ்ரீபாதத்தை) யாவது அடைந்து விடுவோம் என்று நிரந்தரமாக குதூகலித்துக் கொண்டிருக்கிறார்.

✸பதம் என்னுகிற சொல்லை சிலைடையாக கவி இரு பொருள்பட கையாண்டிருக்கிறார். அதாவது வார்த்தை என்று ஒரு பொருள். பாதம் என்று மற்றொரு பொருள்.

20. तिष्ठन्त्यां प्रणयप्रकोपवशतो बाष्पाकुलाक्ष्यां त्वयि
श्रीकण्ठे नखदर्पणप्रतिफलद्रूपे पुरोवर्तिनि।
पादाग्रे पतितोऽयमित्यभिहिते सख्या तवालोकनं
लोलं पादतले विभाति सहसा साकोपमालीमुखे॥

திஷ்டந்த்யாம் ப்ரணயப்ரகோபவசதோ பாஷ்பாகுலாக்ஷ்யாம் த்வயி
ஸ்ரீகண்டே நகதர்ப்பணப்ரதிபலத்ரூபே புரோவர்த்தினி
பாதாக்ரே பதிதோய மித்ய பிஹிதே ஸக்யா தவாலோகனம்
லோலம் பாததலே விபாதி ஸஹஸா ஸாகோபமாலீமுகே

பகவதியே! பிரணய கோபவசப்பட்டு கண்களில் நீர் வழிய நீ உட்கார்ந்திருக்கும் போது எதிரில் ஸ்ரீநீலகண்டன் உட்கார்ந்திருப்பது உன் கண்ணாடி போன்ற ஸ்ரீபாத நகங்களில் பிரதிபலிக்கிறது.

அப்போது உன் தோழி உன் ஸ்ரீபாதத்தில் ஸ்ரீபரமேஸ்வரன் விழுந்து கிடக்கிறார் என்று (பொய்யாக) சொன்னதும் நீ ஆவலுடன் பாதத்தினருகில் பார்க்கிறாய். அங்கு சிவன் வணங்காததைப் பார்த்து நீ உன் தோழியை மேலும் கோபத்துடன் பார்க்கிறாய். உன் கடாக்ஷம் உன் தோழியின் முகத்தின் மீது பிரகாசிக்கிறது. (அதுவே ஒரு தனி அழகாக இருக்கிறது).

21. कान्तालोकनलज्जाया विनमिते कान्ते मुखाम्भोरुहे
यासौ भूतलपातुका नयनयोः शोभा तवाभासते।
सा तावत् तरुणारुणाम्बुजयुगभ्रान्त्या तवाङ्घ्रिद्वय–
प्रान्ते भाति मरन्दपानकुतुकभ्रान्तेव भृङ्गावलिः॥

காந்தாலோகனலஜ்ஜயா வினமிதே காந்தே முகாம்போருஹே
யாஸௌ பூதலபாதுகா நயனயோ: சோபா தவாபாஸதே

ஸா தாவத் தருணாருணாம்புஜயுகப்ராந்த்யா தவாங்க்ரித்வய
ப்ராந்தே பாதி மரந்தபான குதுகப்ராந்தேவ ப்ருங்காவலி:

பகவதியே! உன் மணாளனாகிய சிவன் உன்னைப் பார்க்கிறார் என்ற வெட்கத்தில் உன்னுடைய அழகிய முகத் தாமரையானது கீழே குனிகிறது. அப்போது உன் கண்களிலுள்ள அசாதாரணமான ஒளி பூமியில் விழுந்து பிரகாசிக்கிறது.

அது எப்படியிருக்கிறதென்றால் உன் இரு ஸ்ரீபாதங்களையும் கண்டு அவை புதிதாக மலர்ந்த செந்தாமரைகளோ என்ற மயக்கத்தில் உன் கண்களின் ஒளி மிகவாகப் பிரகாசிக்கிறது. அந்த மயக்கம் எத்தன்மையதென்றால் இனிமையான புஷ்பங்களின் மதுவை உண்டு களித்த மயக்கத்திலிருக்கும் தேனீக்களைப் போன்றது.✸

✸ தேவியின் நயனங்களை தேனீக்களுக்கும் ஸ்ரீபாதங்களை அன்றலர்ந்த செந்தாமரைகளுக்கும் ஸ்ரீபாதங்களைக் கண்டு தேவியின் கண்களில் ஏற்பட்ட மயக்கத்தை புஷ்பங்களின் மதுவை உண்ட தேனீக்களின் மயக்கத்திற்கும் கவி மிக ரசமாக ஒப்பிட்டுள்ளார்.

22. किं ब्रूमः कुटिलात्मकोऽपि कबरीभारस्त्वदीयः शिवे
केलीविश्लथितस्तनोति यदयं त्वत्पादसम्मर्शनम् ।
तद् भूयः सुमनोगणाहृतगुणस्त्वन्मौलिसंलाल्यतां
धत्ते चित्रमसौ त्वदङ्घ्रिभजनात् किं केन नो लभ्यते ॥

கிம் ப்ரூம: குடிலாத்மகோபி கபரீபார்த்வதீய: சிவே
கேலீவிச்லதிதஸ்தனோதி யதயம் த்வத்பாதஸம்மர்சனம்
தத்பூய: ஸுமனோகணாத்ருதகுணஸ்த்வன்
மௌலிஸம்லால்யதாம்
தத்தே சித்ரமஸௌ த்வதங்க்ரி பஜனாத் கிம் கேன நோ லப்யதே

மங்களாம்பிகையே! உன்னுடைய கேசபாரம் நேரானதல்ல. வக்கிரமானது. அதாவது வளைந்திருப்பது.

இருந்தும் விளையாட்டாக அது உன்னால் கட்டாமல் அவிழ்த்து விடப்பட்ட போது உன் ஸ்ரீபாதங்களை ஸ்பரிசிக்கும் பாக்கியம் அந்த கேச பாரத்திற்கு கிடைத்தது.

அதன் பலன் என்னவென்றால் அந்த கேசபாரம் மறுபடியும் உயர்ந்த தெய்வீகமான புஷ்பங்களுடன் சேர்ந்து உன் சிரஸை அலங்கரிக்கிறது. இது என்ன அதிசயம்? உன்னுடைய ஸ்ரீபாதங்களை அண்டினால் யாருக்கும் என்ன தான் கிடைத்து விடாது.✸

கோணல் புத்தி கொண்ட உன் கேசத்திற்கு உன்னுடைய பாத ஸ்பரிசத்தின் பயனாகத் திரும்பவும் உயர்ந்த வாசனைப் புஷ்பங்களுடன் உன் சிரஸை அலங்கரிக்கும் பாக்கியம் கிடைக்கிறது. அதனால் உன் ஸ்ரீபாதங்களை அண்டிய மனிதர்கள் எவ்வளவு இழிவானவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு ஸத்கதி நிச்சயம் என்று தாத்பரியம்.

23. रागद्वेषमुखा हि विभ्रमभरा नश्यन्ति विश्वेश्वरि
त्वत्सङ्गादिति मुक्तितेशनिलये मिथ्या जनैः कथ्यते ।
उद्यद्द्वेषमुदारविभ्रमधरं गात्रं दधत्या त्वया
रागोऽपि ध्रियतेऽधिकं चरणयोः शोणाम्बुजच्छाययोः ॥

ராகத்வேஷமுகா ஹி விப்ரமபரா நச்யந்தி விச்வேச்வரி
த்வத்ஸங்காதிதி முக்திதேசநிலயே மித்யா ஜனை: கத்யதே
உத்யத்வேஷமுதாரவிப்ரமதரம் காத்ரம் ததத்யா த்வயா
ராகோபி த்ரியதேதிகம் சரணயோ: சோணாம்புஜச்சாயயோ:

முக்திக்ஷேத்திரத்தில் வசிக்கும் அம்பிகையே! ✸விஸ்வேஸ்வரியே! ராகம் துவேஷம் (விருப்பு வெறுப்பு) முதலின மன மயக்கங்கள் உன்னை சேவிப்பதனால் நசித்து

விடுகின்றன என்று ஜனங்கள் பொய்யாகச் சொல்லுகிறார்கள்.

ஏனென்றால் உன்னுடைய சரீரமோ பார்ப்போருக்கு மனமயக்கம் ஏற்படுத்துவதாயும் உன்னுடைய ஸ்ரீபாதங்களை கண்டு துவேஷம் ✱✱ மிகுந்ததாகவும் இருக்கிறது. உன்னுடைய செந்தாமரையை ஒத்த ஸ்ரீபாதங்களிலோ ராகம் ✱✱ (சிவப்பு) அதிகமாக இருக்கிறது.

✱முக்தியைத் தரவல்ல ஈசனையும் உன்னிடம் லயிக்கும் படிச் செய்பவயே என்றும் பொருள் கொள்ளலாம்.

✱✱உன்னுடைய அழகிய சரீரம், தன்னை விட அதிக அழகு பொருந்திய ஸ்ரீபாதங்களைக் கண்டு துவேஷம் கொண்டாடுகிறது. ஸ்ரீபாதங்களோ, ராகத்தை (அதாவது சிவப்பு நிறத்தை) தன்னிடம் அதிகமாகவே வைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு ராகம், துவேஷம் இவற்றைத் தன் சரீரத்திலேயே வைத்திருக்கும் உனக்குச் சேவை செய்பவர்களுக்கு எவ்வாறு ராகம், துவேஷம் இவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும் என்று நிந்தாஸ்துதியாக கவி வினவுகிறார். முக்தியையே தரவல்ல அம்பிகை, ராகம், துவேஷம் இவற்றை வெகு சீக்கிரத்தில் நாசம் செய்து விடுவாள் என்பது நிதர்சனம்.

✱✱ஸ்ரீமுககவியின் ஸ்ரீமூகபஞ்சசதீ என்கிற நூலில் ஸ்ரீபாதாரவிந்த கதகத்தில் 16வது ஸ்லோகத்தில் மேற்சொன்ன கருத்துக்கு ஒப்பான விஷயம் பேசப்படுகிறது.

सरागः सद्वेषः प्रसृमरसरोजे प्रतिदिनं
निसर्गादाक्रामन्विबुधजनमूर्धानमधिकम् ।
कथंकारं मातः कथय पदपद्मस्तव सतां
नतानां कामाक्षि प्रकटयति कैवल्यसरणिम् ॥

அன்னையே! காமாக்ஷியே! எப்போதும் ராகத்தை (சிவப்பு நிறத்தை) உடையதாயும், அலர்ந்த செந்தாமரையினிடம் துவேஷம் உடையதாயும் எப்போதும் தன் ஸ்வபாவத்தாலேயே ஞானிகளுடைய சிரஸிலே அளவு கடந்து அடியெடுத்து வைப்பதாயும் விளங்கும் உம் ஸ்ரீபாத கமலமானது வணங்கும் ஸஜ்ஜனங்களுக்கு கைவல்யத்திற்கு உரிய வழியை விளக்குவது எவ்வாறு என்பதைச் சொல்வாயாக.

24. देवि त्वत्पदसत्परागमनिशं मौलौ समाबिभ्रतां
साधूनामपरागतैव भवतीत्याश्चर्यमास्तामिदम् ।
पादस्ते नखरप्रभावलसितो जागर्ति सोऽयं पुन-
श्चित्रं नाम खरप्रभावलसितो दुष्टासुरं पिष्टवान् ॥

தேவி த்வத்பதஸத்பராகமனிசம் மௌலௌ ஸமாபிப்ரதாம்
ஸாதூனாமபராகதைவ பவதீத்யாச்சர்ய மாஸ்தாமிதம்
பாதஸ்தே நகரப்ரபாபலஸிதோ ஜாகர்தி ஸோயம் புனச்
சித்ரம் நாம கரப்ர பாவலஸிதோ துஷ்டாஸுரம் பிஷ்டவான்

தேவியே! உன் ஸ்ரீபாத தூளியை எப்பொழுதும் விடாமல் தங்கள் சிரஸின் மீது தரிக்கும் சாது புருஷர்களுக்கு மன அழுக்கு (ராகம், துவேஷம் முதலியன) முழுவதும் அழிந்து விடுகிறது. இது ஆச்சரியமாக இருக்கிறது.

இதை விட ஆச்சரியமாக உள்ள விஷயம். உன்னுடைய (சிவந்த) ஸ்ரீபாதமானது வெண்மையான நகங்களின் சோபையினால் அதிகமாகப் பிரகாசிக்கிறது. அந்த பாதமானது தன்னுடைய பொறுக்க முடியாத சக்தியினால் உலகை ஹிம்ஸை செய்த மகிஷாஸுரனைத் தகர்த்தெறிந்தது.★

★ பிரகாசமான ஸ்ரீபாதம் அதிக சக்தியென்கிற பிரகாசமுள்ள மகிஷாஸுரனை வதைத்தது. ஸ்ரீபாதத்தின்

தூளி உன் பக்தர்களின் மனத்தில் உள்ள தூசியை நசித்து விடுகிறது.

25. द्वित्वेन स्थितयोस्त्वदीयपदयोर्द्वैतं नरस्य स्फुटं
कैवल्यप्रतिपादने कुशलता जातेति कोऽयं क्रमः ।
किं वा युक्तिभिरत्र मुक्तिकरता व्यक्तैव ते पादयो-
र्मुक्ता एव हि विष्फुरन्ति विमलास्तत्सङ्गिनोऽमी नखाः ॥

த்வத்வேன ஸ்திதயோஸ்த்வத்யபதயோர்த்வைதம் நரஸ்ய ஸ்புடம்
கைவல்யப்ரதிபாதனே குசலதா ஜாதேதி கோயம் க்ரம:
கிம் வா யுக்திபிரத்ர முந்திகரதா வ்யக்தைவ தே பாதயோர்
முக்தா ஏவ ஹி விஷ்புரந்தி விமலாஸ்தத்ஸங்கினோமீ நகா:

பகவதியே! உன் ஸ்ரீபாதங்களோ ஜனங்களுக்கு இரண்டாகவே காட்சியளிக்கின்றன. ஆனால் (பக்தர்களுக்கு) கைவல்யத்தை (பரபிரும்மத்துடன் ஒன்றி விடும் ஒருமை நிலை) அருளுவதில் அந்த இரு ஸ்ரீபாதங்களுக்கு திறமை இருக்கிறது. இது எவ்வாறு?

(அனுமானம் போன்ற) புத்தி சார்ந்த தர்க்கவாதங்களுக்கு இங்கு அவசியமில்லை. உன் ஸ்ரீபாதங்களைப் பார்த்தாலேயே இந்த முக்தியை அருளும் திறன் வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறதே. ஸ்ரீபாதங்களை அண்டியிருக்கும் இந்த புண்ணியசாலிகளான நகங்கள் நிர்மலமாக பக்தர்களைப் போல பிரகாசிக்கின்றன.✱

✱எப்போதும் இரண்டாகவே இருக்கும் வஸ்துவிற்கு ஒருமையே அருளும் சாமர்த்தியம் எவ்வாறு வந்தது என்று சமத்காரமாகக் கேட்கிறார் கவி.

✱✱நகங்கள் முக்தர்களாக (முத்துக்களைப் போல) பிரகாசிக்கின்றன என்பது சிலேடை. பாதங்களில் உள்ள இவ்வளவு நகங்களுக்கு முக்தியைக் கொடுத்திருப்பதால் ஸ்ரீபாதங்கள் பக்தர்களுக்கு முக்தியைத் தரவல்லவை தான் என்பதில் சந்தேகமில்லை என்று அலங்காரமாக பேசுகிறார் கவி.

26. पादाग्रं तव कामदं सुरलताशाकाग्रमाचक्ष्महे
जाता यत्र हि बालपल्लवरुचिः स्वैरेव रागोदयैः ।
उत्सर्पन्नखमण्डलीसुषमया पुष्पालिरुत्पादिता
सञ्जातालिरुतिश्च मञ्जुलतरैर्मञ्जीरशिञ्जारवैः ॥

பாதாக்ரம் தவ காமதம் ஸுரலதாசாகாக்ரமசக்ஷ்மஹே
ஜாதா யத்ர ஹி பாலபல்லவருசி ஸ்வைரேவ ராகோதயை:
உத்ஸர்பன்நக மண்டலீ ஸுஷமையா புஷ்பாலிருத்பாதிதா
ஸஞ்ஜாதாலிருதிச்ச மஞ்ஜுலதரைர் மஞ்ஜீரசிஞ்ஜாரவை:

தேவியே! உன் ஸ்ரீபாதங்கள் தேவலோகத்துக் கல்பகக் கொடியின் கிளை தான் என்று எனக்குத் தோன்றுகிறது. (கல்பகத்தைப் போன்று) ஆசைப்படுவதைக் கொடுப்பது ஸ்ரீபாதம். மேலும் சிவந்திருக்கும் ஸ்ரீபாதத்தில் வளரும் இளங்குருத்துப் போன்ற சிவப்புச் சோபை இருக்கிறது. வரிசையாக உள்ள நகங்களின் மேலோங்கிய பிரகாசம், புஷ்ப வரிசையைப் போலுள்ளது. பாதச் சலங்கைகளின் மிக அழகிய கணீரென்ற நாதம் தேனீக்களின் அழகிய ரீங்காரத்தை ஒத்திருக்கிறது.

27. देवीयं तव सन्नतेशमकुटस्तर्लोककल्लोलिनी–
कल्लोलाहतिभिर्विशेषविमला जीयान्नखश्रेणिका ।
यद्भावल्यमवाप्तुमाप्तकुतुकास्तोये तपस्यन्त्यमी
मीनाः फेनकणाश्च मौक्तिकगणाः शङ्खाश्च शङ्कामहे ॥

தேவீயம் தவ ஸந்நதேச மகுடஸ்வர்லோக கல்லோலினீ –
கல்லோலாஹதி பிர்விசேஷவிமலா ஜீயான்நகச்ரேணிகா
யத்தாவல்யமவாப்துமாப்த குதுகாஸ்தோயே தபஸ்யந்த்யமீ
மீனா: பேனகணாஸ்ச மௌக்திககணா: சங்காஸ்ச சங்காமஹே

தேவியே! ஸ்ரீபரமேஸ்வரன் (பிரணயகலகத்தின் போது) நமஸ்கரிக்கும் போது அவருடைய ஜடாமகுடத்திலிருக்கும் ஸ்வர்க்க கங்கையினுடைய பொங்கும் அலை வேகத்தினால் உன் ஸ்ரீபாதங்களில்

இருக்கும் நக வரிசை அதிநிர்மலமாக காட்சியளிக்கிறது. அந்த நக வரிசை பல்லாண்டு வாழ்க.!

இந்த கங்காஜலத்தில் இருக்கும் மீன்களும் நுரைத் திவலைகளும் முத்துக் கூட்டங்களும் சங்குகளும் இந்த நகவரிசையின் அதிசயமான வெண்மையைத் தாங்களும் அடைய மிக்க ஆவலுடையவைகளாக இருக்கின்றன. அதற்காக இந்த கங்கா ஜலத்தில் அவை தபஸ் செய்கின்றன என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம்.

28. माने शम्भुशिरः प्रहारचरितं नैव त्वदिच्छाकृतं
जाने देवि पदाब्जयोस्तु पुरजिन्मूर्ध्ना विरोधादिदम् ।
एते पादनखांशुबद्धकलहाः शीतांशुमन्दाकिनी–
भोगीन्द्राः किल शङ्करस्य शिरसा शङ्कां विना रक्षिताः ॥

மானே சம்புசிர: ப்ரஹாரசரிதம் நைவ த்வதிச்சாக்ருதம்
ஜானே தேவி பதாப்ஜயோஸ்து புரஜின்மூர்த்னா விரோதாதிதம்
ஏதே பாதநகாம் சுபத்தகலஹா: சீதாம்சுமந்தாகினீ
போகீந்த்ரா கில சங்கரஸ்ய சிரஸா சங்காம் வினா ரக்ஷிதா:

தேவியே! பிரணய கோபத்தில் ஸ்ரீபரமேஸ்வரனின் சிரஸின் மீது உன் ஸ்ரீபாதத்தை வைத்து அடிப்பதென்கிற காரியம் உன் இச்சையின் படி அலல என்றே நான் நினைக்கிறேன். பின் ஏன் இவ்வாறு நடக்கிறதென்றால் திரிபுராந்தகனான ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸுடன் தங்கள் ஸ்ரீபாத கமலங்களுக்கு விரோத பாவம் இருப்பதனால் தான். விரோத பாவத்திற்குக் காரணம்:

உன் ஸ்ரீபாதங்களில் வெள்ளை வெளேரென்று பிரகாசிக்கும் நகங்களின் ஒளிக்கிரணங்களுடன் ஸ்ரீபரமேஸ்வரனின் சிரஸை அலங்கரிக்கும் சந்திரன், கங்கை, ஸர்ப்பராஜனான சேஷன் இம் மூவருக்கும் போட்டியினால் கலகம் உண்டாகிறது. பிரகாசப் போட்டியில் ஒளி குறைந்து தோற்றுப் போன இம் மூவரும் (சரணாகதவத்ஸலரான) ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸினால் சந்தேகமின்றி காப்பாற்றப்பட்டார்களே என்று.

தன்னுடன் பிரகாசத்தில் குறைந்து தோற்றுப் போன சந்திரன் கங்கை சேஷன் இம் மூவருக்கும் ஸ்ரீபரமேஸ்வரன் அபயம் அளித்து தன் சிரஸில் தரித்துக் கொண்டு

விட்டதால் ஸ்ரீபாதநகங்கள் எப்போதும் கலக புத்தியுடன் இருக்கின்றன. அதனால் ஸ்ரீபரமேஸ்வரன் நமஸ்கரிக்கும் போது இது தான் தக்க சமயம் என்று தங்கள் ஸ்ரீபாத கமலங்கள் தங்களுக்கு இச்சையில்லாவிட்டாலும் கூட அவருடைய சிரஸை அடித்து விடுகின்றன் என்று நயம்படச் சொல்கிறார் கவி.

29. देवि त्वच्चरणोज्ज्वलन्नखमणिश्रेणीषु लीनो नम–
न्नाभाति स्फटिकाचलस्फुटतटीशायीव सोऽयं नटः ।
हंसालीनवपुः स्वयं कमलभूः क्षीराब्धिशायीव च
श्रीभर्ता मघवापि नाकसरसि स्नायन्निवालक्ष्यते ॥

தேவி த்வச்சரணோஜ்வலந்நகமணிச்ரேணீஷு லீனோ நமந் –
நாபாதி ஸ்படிகாசலஸ்புடதடீசாயீவ ஸோயம் நட:
ஹம்ஸாலீனவபு: ஸ்வயம் கமலபூ: க்ஷீராப்திசாயீவச
ஸ்ரீபர்த்தா மகவாபி நாகஸரஸி ஸ்நாயன்னிவாலக்ஷ்யதே

தேவியே! இந்த ஸ்ரீநடராஜனான சிவபெருமான் உன் ஸ்ரீபாதங்களில் நமஸ்கரிக்கும் போது முத்துப் போன்ற ஸ்ரீபாத நக வரிசையின் பிரகாசத்தினால் ஸ்படிகாசலமான அதாவது வெள்ளி மலையான கைலாஸத்தின் மலைச்சரிவில் படுத்திருப்பதைப் போலப் பிரகாசிக்கிறார். அது போல, கமலத்தில் வாசம் செய்யும் பிரம்மா நமஸ்கரிக்கும் போது வெள்ளை வெளேரென்று பிரகாசிக்கும் தன் வாகனமான ஹம்ஸத்தின் மீது படுத்திருப்பதைப் போலப் பிரகாசிக்கிறார். லக்ஷ்மீநாயகனான ஸ்ரீவிஷ்ணு நமஸ்கரிக்கும் போது பால் கடலில் சயனித்திருப்பதைப் போலப் பிரகாசிக்கிறார். தேவேந்திரனும் நமஸ்கரிக்கும் போது தேவலோகத்து மானஸரோவர் என்கிற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவரைப் போலத் தோற்றமளிக்கிறார்.

பிரம்மா, விஷ்ணு, சிவன், இந்திரன் ஆகிய எல்லோரும் உன் ஸ்ரீபாதங்களில் நமஸ்கரித்து பிரகாசத்தை

ஞானத்தை தங்கள் காரியங்களைச் செய்யும் சக்தியைப் பெறுகிறார்கள் என்று தாத்பரியம்.

ஸௌந்தர்யலஹரியில் 22வது ச்லோகம் ஒப்பு நோக்கத் தக்கது.

भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणां
इति स्तोतुं वाञ्छन् कथयति भवानि त्वमिति यः।
तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्य पदवीं
मुकुन्द ब्रह्मेन्द्र–स्फुट मकुट नीराजितपदाम्॥

பவானியே! நீ தாஸனாகிய என்னிடத்தில் கருணையுடன் கூடிய பார்வையை செலுத்தியருள்வாயாக என்று எவனொருவன் துதி செய்ய விரும்பி பவானி நீ என்று (இரண்டு பதங்களை) சொன்னால் அப்போதே நீ அவனுக்கு விஷ்ணு பிரம்மா இந்திரன் ஆகியவர்களின் கிரீட ஒளியால் நீராஜனம் செய்யப் பெற்ற திருவடிகளையுடைய உனது ஸாயுஜ்ய பதவியை அளிக்கிறாய்.

30. डोलाकेलिविधौ हिमाचलशिलादेशे समभ्याहतात्
पादाग्रात्तवयानि यावकरसप्रस्यन्दनान्याम्बिके।
तान्यभ्यागतशुम्भसङ्गरभवद्रक्ताम्बुविस्तारणा–
बिन्दुक्षेपनिभानि नन्ददमरीवन्द्यानि वन्दामहे॥

டோலாகேலிவிதௌ ஹிமாசலசிலாதேசே ஸமப்யாஹதாத்
பாதாக்ராத்தவ யானி யாவகரஸ ப்ரஸ்யந்த நான்யாம்பிகே
தான்யப்யாகதசும்ப ஸங்கர பவத்ரக்தாம்பு விஸ்தாரணா
பிந்துக்ஷேபநிபானி நந்ததமரீவந்த்யானி வந்தாமஹே

அம்பிகையே! ஹிமயமலையின் கல் நிரம்பிய பிரதேசத்தில் நீ ஊஞ்சலில் விளையாடும் போது உன் ஸ்ரீபாதங்கள் கற்களில் உராய்கின்றன. அப்போது ஸ்ரீபாதங்களின் மீது இருக்கும் செம்பூச்சிலிருந்து சில

துளிகள் வெளியே அந்த கற்களின் மீது விழுகின்றன. அந்த செம்பூச்சுத் துளிகளுக்கு நாங்கள் வந்தனை செய்கிறோம். அந்தத் துளிகளுக்கு தேவலோக சுந்தர ஸ்திரீகளும் வந்து ஆனந்தத்துடன் வந்தனை செய்கிறார்கள். ஏனென்றால் யுத்த பூமியில் எதிர்படும் சும்பன் என்கிற அசுரனுடைய பெருக்கெடுத்தோடும் ரத்த பிரவாகத்திற்கு சுருக்கமான முன்னோடியாக இந்த ஸ்ரீபாத செம்பூச்சுத் துளிகள் விளங்குகின்றன.★

★யுத்தத்தில் பின்னர் சும்பாசுரன் மரிக்கப் போகிறான் என்று முன்னதாகவே தெரிவிக்கும் ஸ்ரீபாத செம்பூச்சுத் துளிகளுக்கு சுரலோக சுந்தரிகள் ஆனந்தத்துடன் வந்தனம் செய்கின்றனர்.

31. डोलाकेलिषु यं हिमालयशिलालग्नं वनेवासिनो
भत्तत्या योगिवरास्त्रिपुण्ड्र कलिते लिम्पन्ति फालान्तरे ।
यं सिद्धप्रमदाः समेत्य तिलकं कुर्वन्ति नत्वा मुहु-
स्तं दाक्षायणि ते कदा नु पदयोरीक्षेय लाक्षारसम् ॥

டோலாகேலிஷு யம் ஹிமாலயசிலாலக்னம் வனேவாஸினோ
பக்த்யா யோகிவராஸ்த்ரி புண்ட்ரகலிதே லிம்பந்தி பாலாந்தரே
யம் ஸித்தப்ரமதா: ஸமேத்ய திலகம் குர்வந்தி நத்வா முஹு -
ஸ்தம் தாக்ஷாயணி தே கதா நு பதயோரீக்ஷேய லாக்ஷாரஸம்

தாக்ஷாயணியே! (தக்ஷப்ரஜாபதியின் புத்திரியே) ! நீ ஹிமாலய மலையின் கல் பிரதேசத்தில் ஊஞ்சலில் விளையாடும் போது உன் ஸ்ரீபாதங்களிலிருந்து வெளிப்படும் செம்பூச்சை அங்கு வனங்களில் வசிக்கும் உத்தமமான யோகிகள் பக்தியுடன் தங்கள் நெற்றியில் (ஏற்கனவே) இருக்கும் மூன்று பட்டைகளாக இருக்கும் விபூதியுடன் (த்ரிபுண்ட்ரகம்) சேர்த்து பூசிக் கொள்கின்றனர்.★

மேலும் சித்தர்களுடைய ஸ்திரீகள் கீழே விழுந்து நமஸ்கரித்து நெற்றித் திலகமாக உன் ஸ்ரீபாத செம்பூச்சுத்

துளிகளை அணிந்து கொள்கின்றனர். அப்போ்ப்பட்ட உன் ஸ்ரீபாத செம்பூச்சை நான் எப்போது பார்ப்பேன்.✱

✱மகாமுனிவர்களும் நமஸ்கரித்து அணிந்து கொள்ளும் அந்த ஸ்ரீபாத செம்பூச்சைப் பார்க்கத் தகுதி என் போன்ற சாதாரண மனிதனுக்கு எப்போது கிடைக்கும்.

32. देवि त्वं मुरवैरिणः प्रणमने यत्किंचिदाकुञ्चय
श्रीपादाम्बुजमन्यथास्य शिरसि त्वत्पादलाक्षाञ्चिते ।
श्रीभूम्योरितरप्रणामकृ तमित्यन्योन्यमाशङ्कया
रोषव्याकुलयोश्चिरं स भगवान् जायेत पर्याकुलः ॥

தேவி த்வம் முரவைரிண: ப்ரணமனே யத்கிங்சிதாகுஞ்சய
ஸ்ரீபாதாம்புஜமன்யதாஸ்ய சிரஸி த்வத்பாதலாக்ஷாஞ்சிதே
ஸ்ரீபூம்யோரிதரப்ரணாமக்ருதமித்யன் யோன்யமாசங்கயா
ரோஷவ்யாகுலயோஸ்சிரம் ஸ பகவான் ஜாயேத பர்யாகுல:

தேவியே! முராரியான ஸ்ரீவிஷ்ணு நமஸ்கரிக்கும் போது நீ உன் ஸ்ரீபாத கமலங்களை கொஞ்சம் வளைத்துக் கொள் (அதாவது ஸ்ரீவிஷ்ணுவின் சிரஸை உன் ஸ்ரீபாதங்கள் தொடாமலிருக்கட்டும்). இல்லாவிடில் ஸ்ரீவிஷ்ணுவின் சிரஸின் மீது உன் ஸ்ரீபாத செம்பூச்சு கொஞ்சம் பட்டு விடும்.

அதைக் கண்டு ஸ்ரீதேவிக்கும், பூதேவிக்கும் கோபத்தினால் சண்டை ஏற்பட்டு விடும். ஏனென்றால் பிரணயகலகத்தில் ஸ்ரீவிஷ்ணு இன்னொரு தேவியின் பாதங்களில் நமஸ்கரித்ததனால் தான் இந்த செம்பூச்சு வந்திருக்கிறதென்று ஒருவருக்கொருவர் சந்தேகிப்பார். இந்த சண்டையினால் அந்த ஸ்ரீவிஷ்ணு பகவான் நெடுங்காலத்திற்கு சிரமப்பட வேண்டி வரும்.

33. प्रागुद्वाहविधौ हिमाचलसदस्यश्माधिरोहाय य-
न्न स्प्रक्ष्यामि वियद्धुनीमिति पुनः सत्यं विधातुं च यत्।
दैत्योत्पेषणसाहसे विरचिते संवाहनार्थं च यत्
तत्पादग्रहणत्रयं विजयते शर्वेण शर्वाणि ते ॥

ப்ராகுத்வாஹவிதௌ ஹிமாசல ஸதஸ்யச்சமாதிரோஹாய ய –
ந்ந ஸ்ப்ரக்ஷ்யாமி வியத்துநீமிதி புன: ஸத்யம் விதாதும் ச யத்
தைத்யோத்பேஷணஸாஹஸே விரசிதே ஸம்வாஹனார்த்தம் ச யத்
தத்பாதக்ரஹணத்ரயம் விஜயதே சர்வேண சர்வாணி தே

சிவபத்னியே! முன்பு ஹிமயமலையில் கல்யாண ஸதஸில் விவாகத்தின் போது ஸ்ரீபரமேஸ்வரன் உன் ஸ்ரீபாதத்தைப் பிடித்து (அம்மியின் மீது) கல்லின் மீது ஏற்றினார். மறுபடியும் ஸ்ரீபரமேஸ்வரன் தன் ஜடைமகுடத்திலிருக்கும் கங்கையை ஒருபோதும் தொட மாட்டேன் என்று சத்தியம் செய்யும் போது உன் ஸ்ரீபாதத்தைப் பிடித்தார். பின் நீ மகிஷாஸுரனை ஸம்காரம் செய்ய முற்பட்ட போது உன் ஸ்ரீபாதத்தைப் பிடித்து உனக்கு சுச்ரூஷை செய்தார். ஸ்ரீபரமேஸ்வரன் உன் ஸ்ரீபாதங்களைப் பிடித்த இந்த மூன்று சந்தர்ப்பங்களும் போற்றத்தக்கவை.

34. शुम्भस्ते किल देवि रागकलहे पादप्रहारोत्सवं
लब्धुं कांक्षितवानुपायमिह खल्वज्ञो न विज्ञातवान्।
यद्यायोत्स्यति घोरमाहिषवपुर्धारी स वैरी ततः
प्राधानिष्यत मूर्ध्नि कोमलरुचा पादारविन्देन ते ॥

சும்பஸ்தே கில தேவி ராககலஹே பாதப்ரஹாரோத்ஸவம்
லப்தும் காங்க்ஷிதவானுபாயமிஹ கல்வஞ்ஞோ ந விஞாதவான்

யத்யாயோத்ஸ்யதி கோரமாகிஷவபுர்தாரீஸ வைரீதத:
ப்ராதானிஷ்யத மூர்தனி கோமலருசா பாதாரவிந்தேன தே

தேவியே! சும்பன் என்ற அசுரன் உன் மேல் ப்ரியப்பட்டு ✸ அந்த அன்புக் கலகத்தில் உன் ஸ்ரீபாதத்தின் அடி தன் மீது விழும் என்று எதிர்பார்த்தானே தவிர, அந்த அடியை அடைவதற்கு உள்ள சரியான உபாயத்தை அந்த மூடன் அறிந்திருக்கவில்லை.

உன் மேல் விரோத பாவங் கொண்டு மகிஷ ரூபத்தில் பயங்கரமாக வந்து யுத்தம் செய்தானே மகிஷாஸுரன்: அது போல சும்பனும் விரோத பாவத்துடன் யுத்தம் செய்திருந்தால் உன் மிருதுவான, ஒளி பொருந்திய ஸ்ரீபாதாரவிந்தத்தினால் அவனுடைய சிரஸின் மீது அடி கிடைத்திருக்குமன்றோ!

✸சும்பாஸுரன் தேவியின் சௌந்தர்யத்தினால் கவரப்பட்டு தேவியை அடைய விரும்பினான் என்ற வரலாறு தேவீமாகாத்மியத்தில் இடம் பெறுகிறது.

35.. आनम्रे गिरिशे पदप्रहरणे दत्ते भवत्या रूषा
नाथे किं महिषोऽहमित्यभिहिते देवेन तस्मिन् क्षणे ।
आलीष्वाकुलितस्मितासु पुनरप्युद्दामपुष्यद्रुष–
स्तन्मौलौ जयति द्वितीयमपि ते पादाब्जसन्ताडनम् ॥

ஆநம்ரே கிரிசே பதப்ரஹரணே தத்தே பவத்யா ருஷா
நாதே கிம் மகிஷோஹமித்யபிஹிதே தேவேன தஸ்மின் க்ஷணே
ஆலீஷ்வாகுலிதஸ்மிதாஸு புனரப்யுத்தாம புஷ்யத்ருஷ
ஸ்தன்மௌலௌ ஜயதி த்விதீயமபி தே பாதாப்ஜஸந்தாடனம்

தேவியே! ஸ்ரீபரமேஸ்வரன் (கிரீசன்) பிரணய கலகத்தில் நமஸ்கரிக்கும் போது கோபத்துடன் நீ உன் ஸ்ரீபாதத்தினால் தட்டுகிறாய். அப்போது அவர், தலைவியே! (நாதே) நான் என்ன மகிஷாஸுரனா? என்று கேட்கிறார். அதைப் பார்த்து உன் (பக்கத்திலிருக்கும்) வருத்தமுற்ற தோழிகள் மந்தஹாசம் செய்கின்றனர்.✸ அதைக் கண்டு உனக்கு முன்னை விட அதிகமாக கோபம்

உண்டாகி ஸ்ரீபரமேஸ்வரனுடைய சிரஸின் மீது இரண்டாந்தடவையாக தட்டுகிறாய். உன் ஸ்ரீபாத கமலத்தின் அந்த அடி போற்றத்தக்கது.

★ஸ்ரீபரமேஸ்வரன் நமஸ்கரித்தும் தேவிக்கு கோபம் தணியாததைக் கண்டு தோழிகளுக்கு வருத்தம். அவர் சமத்காரமாக நான் என்ன மகிஷாஸுரனா? என்று பேசியதைப் பார்த்து அவர்கள் புன்சிரிப்பு செய்கின்றனர். அந்த புன்சிரிப்பைக் கண்டு தன்னை இந்த தோழிகள் கருணையே இல்லாதவள் என்று பரிகசிக்கிறார்களே என்று உனக்கு இன்னும் கோபம் அதிகமாகி மறுபடியும் உன் பாதாரவிந்தத்தினால் அடி கொடுக்கிறாய். ஸ்ரீபரமேஸ்வரனுக்கு அதனால் சந்தோஷமே.

36. पादाग्रं तव सङ्गरश्रमवशादाक्षारिलाक्षारसं
विन्यस्तं मृगनायकोपरि चिराज्जीयादगेन्द्रात्मजे ।
यत्कान्त्यैव हि लोहितो मृगपतिर्दैत्यप्रहारोद्गल–
द्रक्ताम्भःकणिका वहन्नपि तथा नामानि वैमानिकैः ॥

பாதாக்ரம் தவ ஸங்கரச்ரமவசாதாக்ஷாரிலாக்ஷாரஸம்
வின்யஸ்தம் ம:ருகநாயகோபரி சிராஜ்ஜீயாதகேந்த்ராத்மஜே
யத்காந்த்யைவ ஹி லோஹிதோ
ம்ருகபதிர்தைத்யப்ரஹாரோத்கல
த்ரக்தாம்ப: கணிகா வஹன்னபி ததா நாமானி வைமானிகை:

பர்வதராஜகுமாரியே! யுத்தத்தின் களைப்பினால் நீ (மிருக நாயகனான) சிங்கத்தின் மீது வீற்றிருக்கும் போது உன் ஸ்ரீபாத செம்பூச்சானது சிங்க வாகனத்தின் மீது படுகிறது. அந்த ஸ்ரீபாதத்திற்கு போற்றி.!

உன் ஸ்ரீபாத காந்தியினால் சிங்கமானது (உடல் முழுதும்) சிவப்பு வர்ணம் பூண்டது போல் பிரகாசிக்கிறது. இதே சிங்கமானது அசுரர்களை வதைக்கும் போது ஏற்படும் ரத்தப் பெருக்கின் துளிகளை தன் உடல் மீது சுமக்கும் போது

கூட ஆகாசத்தில் விமானத்தில் சஞ்சரிக்கும் சித்தர்களாலும் (தேவர்களாலும்) கொண்டாடப்படவில்லை.✵

✵உன் ஸ்ரீபாதகாந்தியினால் சிங்கவாகனம் பிரகாசிக்கும் போது தேவர்களும் வணங்கும் யோக்யதையைப் பெற்று விடுகிறது. ஆனால் தனியாக சிங்கமானது அசுரர்களைக் கொன்று ரத்தம் தன் உடல் மீது படியும் போது கூட அதே சிங்கத்தைக் கொண்டாடுவதில்லை.

37. नैवालिम्प निलिम्पमूर्धसु न वा सिंहोपरि त्यज्यतां
मा चेदं महिषस्य मूर्ध्नि रभसादालुप्य लोलुप्यताम् ।
पत्युर्मौलिनदीजले परमिदं संक्षालनीयं त्वये–
त्यालीकेलिगिरो जयन्ति गिरिजे त्वत्पादलाक्षार्पणे ॥

நைவாலிம்ப நிலிம்பமூர்த்தஸு ந வா ஸிம்ஹோபர த்யஜ்யதாம்
மா சேதம் மகிஷஸ்ய மூர்த்னி ரபஸாதாலுப்ய லோலுப்யதாம்
பத்யுர் மௌலிநதீஜலே பரமிதம் ஸங்க்ஷாலனீயம் த்வயே
த்யாலீகேலிகிரோ ஜயந்தி கிரிஜே த்வத் பாதலாக்ஷார்பணே

ஹிமவானுடைய புத்திரியே! (கிரிஜே) உன் தோழிகள் உன் ஸ்ரீபாதங்களில் செம்பூச்சுப் பூசி அலங்கரிக்கும் போது விளையாட்டாக பின் வருமாறு சொல்கிறார்கள். இந்த செம்பூச்சினை தேவர்கள் நமஸ்கரிக்கும் போது அவர்களுடைய சிரஸில் படும் படி விட்டு விடாதே. அது போல (உன் வாகனமாகிய) சிங்கத்தின் மீதும் விட்டு விடாதே. கோபத்துடன் மகிஷாஸுரனுடைய சிரஸின் மீது உதைக்கும் போதும் நீ இந்த செம்பூச்சை அங்கே விட்டு விடாதே. ஸ்ரீபரமேஸ்வரன் நமஸ்கரிக்கும் போது அவருடைய சிரஸின் மீது இருக்கும் கங்கா நதியின் நீரில் இந்த பரமபாவனமான செம்பூச்சானது பாத பிரக்ஷாலம் செய்யப்பட வேண்டியது (அலம்பப்பட வேண்டியது)✵

★திரும்பவும் செம்பூச்சு அலங்காரம் செய்வதற்கு முன்பு ஏற்கனவே இருக்கும் செம்பூச்சை அலம்பி நீக்குவதற்கு ஏற்ற இடம் கங்கா நதி ஜலமேயன்றி மற்ற இடங்கள் இல்லை என்று தாத்பரியம்.

38. नत्वैव प्रथमं त्वदङ्घ्रिकमलं तौ पुष्पवन्तावुभौ
त्रैलोक्यं महसाऽभिभूय चरतो व्योमान्तरप्रान्तरे ।
नाथे तौ कथमन्यथा परिगलल्लाक्षारसक्षालितौ
वीक्ष्येते भृशशोणबिम्बमुदयारम्भे प्रियम्भावुकौ ॥

நத்வைவ ப்ரதமம் த்வங்க்ரிகமலம் தௌ புஷ்பவந்தாவுபௌ
த்ரைலோக்யம் மஹஸாபிபூய சரதோ வ்யோமாந்தரப்ராந்தரே
நாதே தௌ கதமன்யதா பரிகலல்லாக்ஷாரஸக்ஷாலிதௌ
வீக்ஷ்யேதே ப்ருசசோணபிம்பமுதயாரம்பே ப்ரியம்பாவுகௌ

ஜகதீஸ்வரியே! சந்திர ஸூர்யர்கள் என்ற அந்த இருவரும் உன் ஸ்ரீபாத கமலங்களை முதலில் நமஸ்கரித்து (அதன்பின்) மூன்று உலகங்களையும் தன் அதி பிரகாசத்தால் ஜயித்து வெகு தூரத்தில் ஆசாத்தில் ஸஞ்சரிக்கின்றனர்.

அப்படியில்லாவிடில் (அதாவது உன் ஸ்ரீபாதங்களை நமஸ்கரிக்காவிடில்) ஸ்ரீபாதங்களிலிருந்து வெளிப்படும் செம்பஞ்சுக் குழம்பில் நனைந்து உதயமாகும் போது (சூரிய சந்திரர்களின் உதய ஆரம்பத்தில்) மிகுந்த சிவப்பு நிறமான மண்டலத்துடன் அதிரமணீயமாக எங்ஙனம் காட்சியளிக்க முடியும்.★

★சூரிய சந்திரர்கள் உதயமாவதற்கு முன்பு அம்பிகையின் ஸ்ரீபாதங்களில் தினந்தோறும் திரும்பத் திரும்ப நமஸ்கரிப்பதனால் தான், அதிரமணீயமான சிவந்த மண்டலத்துடன் உதயமாகி மூன்று உலகங்களிலும் தங்களுக்கு சமானமான தேஜஸ் யாருக்கும் இல்லை என்கிற படி பிரகாசிக்கின்றனர்.

39. त्रैलोक्यं वशयन्ति पापपटलीमुच्चाटयन्त्युच्चकै-
विंद्वेषं जनयन्त्यधर्मविषये प्रस्तम्भयन्त्यापदम् ।
आकर्षन्त्यभिवाञ्छितानि महिषस्ववैरिणो मारणा-
श्चित्रं त्वत्पदसिद्धचूर्णनिवहः षट्कर्मणां साधकाः ॥

த்ரைலோக்யம் வசயந்தி பாபபட லீமுச்சாடயந்த்யுச்சகைர்
வித்வேஷ ஜனயந்த்யதர்ம விஷயே ப்ரஸ்தம்பயந்த்யாபதம்
ஆகர்ஷந்த்யபி வாஞ்சி தானி மஹிஷஸ்வர்வைரிணோ மாரணாஸ் -
சித்ரம் த்வத்பதஸித்த சூர்ணநிவஹ: ஷட்கர்மணாம் ஸாதகா:

தேவியே! உன் ஸ்ரீபாத தூளியை விடாமல் சிரஸில் தரிக்கும் பக்தர்கள் ✱ ஆறு கர்மங்களையும் சாதித்து விடுகின்றனர். அதாவது மூன்று உலகங்களையும் வசியப்படுத்தி விடுகின்றனர். (ஸ்திரீகள், ராஜாக்கள் என்றில்லாமல் முழுவதுமாக மூன்று உலகங்களையும்) பாபக் கூட்டத்தை முழுவதுமாக விரட்டி விடுகின்றனர். அதர்ம விஷயங்களில் மிகுந்த வெறுப்பை உண்டாக்கி விடுகின்றனர். ஆபத்துக்களை ஸ்தம்பிக்கும் படி செய்து விடுகின்றனர். (ஆபத்துக்கள் நெருங்குவதில்லை) வேண்டிய மனோபிலாஷைகளை ஆகர்ஷித்து விடுகின்றனர். மகிஷாஸுரனை வதம் செய்தது போல் விரோதிகளை வென்று விடுகின்றனர். (இவ்வாறு ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஆறு விஷயங்களையும் ஒரே வஸ்துவினால் பக்தர்கள் சாதிக்கின்றனர்) இது வெகு ஆச்சரியம்.✱✱

✱மாந்த்ரீகப்படி சூர்ணத்தை உபயோகப்படுத்தி சாதிக்கக் கூடிய ஆறு விஷயங்களாவன: வச்யம் (வசீகரிப்பது), உச்சாடனம் (விரட்டுவது), வித்வேஷணம் (வெறுப்பை உண்டு பண்ணுவது), ஸ்தம்பனம் (நெருங்க விடாமல் நிறுத்தி விடுவது), ஆகர்ஷணம், மாரணம் (கொல்லுதல்) என்பன.

★★ஸ்ரீமூகபஞ்சதியில் பாதாரவிந்த சதகத்தில் 54வது ஸ்லோகம் ஒப்பு நோக்கத் தக்கது.

नतानां संपत्तैरनवरतमाकर्षणजपः
प्ररोहत्संसारप्रसरगरिमस्तम्भनजपः ।
त्वदीयः कामाक्षि स्मरहरमनोमोहनजपः
पटीयान्नः पायात्पदनलिनमञ्जीरनिनदः ॥

காமாக்ஷியே! நமஸ்கரிப்பவர்களுக்கு ஸம்பத்தை இடைவிடாமல் வரவழைத்து அளிக்கும் ஆகர்ஷண மந்திரமாயும், நன்றாக வளரும் ஸம்ஸாரத்தினுடைய செழிப்பின் மிகுதியை (வளரவொட்டாது) தடுக்கும் ஸ்தம்பன மந்திரமாயும் காமனை வென்ற ஸ்ரீபரமேஸ்வரனுடைய மனத்தையும் மோகமுறச் செய்யும் மோகன மந்திரமாயும் விளங்குவதான உன்னுடைய ஸ்ரீபாதத் தாமரைகளிலுள்ள சிலம்புகளின் தெளிவான இனிய சப்தமானது எம்மைக் காப்பதாகுக.

40. किं कल्पद्रुमपञ्चकं प्रणमतामाकाङ्क्षितापादने
किं पञ्चायुधबाणपञ्चकमिदं मारारिसम्मोहने ।
सूक्ष्मं किञ्चन पञ्चभूतवपुषो विश्वस्य किं कारणं
त्वत्पादाङ्गुलिपञ्चकात्मकमिदं किं भाति शम्भोः प्रिये ॥

கிம் கல்பத்ருமபஞ்சகம் ப்ரணமதாமாகாங்க்ஷிதாபாதனே
கிம் பஞ்சாயுதபாணபஞ்சகமிதம் மாராரிஸம்மோகனே
ஸூக்ஷ்மம் கிஞ்சன பஞ்சபூதவபுஷோ விச்வஸ்ய கிம் காரணம்
த்வத்பாதாங்குலி பஞ்சகாத்மகமிதம் கிம் பாதி சம்போ: ப்ரியே

சம்புவிற்கு ப்ரியமான தேவியே! உன் ஸ்ரீபாதங்களின் ஐந்து விரல்களும் (ஐந்தாகவும் மூலத்தில் ஒன்றாகவும் இருந்து) எவ்வாறு பிரகாசிக்கிறது. நமஸ்கரிப்பவர்களின் மனோபிலாக்ஷைகளைப் பூர்த்தி செய்வதில் ஐந்து கல்பவிருக்ஷங்களாக இருக்கின்றன. (மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், கல்பவிருக்ஷம், ஹரிசந்தனம் என்பவை ஐந்து தேவலோக கல்ப விருக்ஷங்கள்). மன்மதனை வென்ற ஸ்ரீபரமேஸ்வரனை மோகம் கொள்ளும் படி செய்வதில் (மன்மதனின்) ஐந்து மலரம்புகள் என்கிற ஆயுதங்களாக இருக்கின்றன. (தாமரை, அசோகம், மாவின்பூ, நவமல்லிகை, நீலோத்பலம் என்பவை மன்மதனின் பஞ்ச பாணங்களாகிய புஷ்பங்கள்). அல்லது ஐந்து மகா பூதங்களின் சேர்க்கையினால் (பஞ்சீகரணம் என்கிற முறைப்படி சேர்க்கையினால்) சிருஷ்டிக்கப்பட்டுள்ள இந்த பிரம்மாண்டத்தின் காரணமாயுள்ள சூக்ஷ்மமான பூதங்களாக இருக்கின்றன.

(பூமி, நீர், அக்கினி, வாயு, ஆகாசம் என்பவை ஐந்து மகாபூதங்கள்)✱

✱ஸ்ரீபாதங்கள் ஸர்வ சக்தி வாய்ந்தவை என்பது தாத்பரியம்.

ஸ்படிகம் போன்று நிர்மலமான தடாகத்தில் செந்தாமரையைப் போல, வெண்மையான நகங்களின் காந்தியாகிற தடாகத்தில் சிவந்த ஸ்ரீபாதங்கள் ஜ்வலிக்கின்றன. அப்போது சலங்கைகளின் இந்திர நீல மணிப் பிரகாசம் தாமரையைச் சூழும் வண்டுகளைப் போலவும் ஸ்ரீபாதங்களின் அலங்காரம் மகரந்தப் பொடிகளைப் போலவும் ஸ்ரீபாதங்களை ஸேவிக்கும் பரமஹம்ஸ மகரிஷிகள் ஹம்ஸ பக்ஷிகளைப் போலவும் தோன்றி ஸ்ரீபாத சோபையை வெகுவாக அதிகரிக்கின்றன.

44. मञ्जीरस्वरमञ्जुविष्किररवे तत्सङ्गिनीलोत्पल–
छायारूपतमोलवे नखमिषादक्षीणतारागणे ।
सन्ध्यारागनिभस्वकान्तिपटले त्वत्पादमूलात्मक–
प्रत्यूषोपगमे हि देवि लभते लोकः प्रबोधोदयम् ॥

மஞ்ஜீரஸ்வரமஞ்ஜுவிஷ்கிரரவே தத்ஸங்கிநீலோத்பலச் -
சாயாரூபதமோலவே நகமிஷாதக்ஷீண தாராகணே
ஸந்த்யா ராக நிபஸ்வகாந்தி படலே த்வத்பாதமூலாத்மக
ப்ரத்யூஷோபகமே ஹி தேவி லபதே லோக: ப்ரபோதோதயம்

தேவியே! உன் ஸ்ரீபாதங்களின் முன்பாகம் என்கிற அதிகாலை வரும் போது உலகம் சூரியோதத்தை அடைகிறது. ★ஸ்ரீபாதச் சலங்கைகளின் ஒலி சேவல்களின் அழகிய (கொக்கரக்கோ என்கிற) சத்தம் போல் இருக்கிறது. அந்த சலங்கைகளிலுள்ள இந்திர நீல மணிகளின் காந்தியானது அதிகாலையின் மங்கிய இருட்டைப் போலிருக்கிறது. பாத நகங்கள் அதிகப் பிரகாசத்துடன் கூடிய நக்ஷத்திரங்கள் போல இருக்கின்றன. ஸந்தியாகாலத்தின் செம்மண்டலம் (ஆகாசத்தில் உள்ளது) போல் ஸ்ரீபாதத்தின் செம்மை நிறம் பிரகாசிக்கிறது.

★ப்ரபோதோதயம் என்கிற பதம் குறிப்பதாவது:

நித்திரையிலிருந்து விழிப்பை உண்டாக்கும் சூரியனின் உதயம். அதாவது அஞ்ஞானம் என்கிற

நித்திரையிலிருந்து தத்வஞானம் என்கிற விழிப்பை உண்டாக்கும் ஸ்ரீபாதம்.

45. विद्यामुक्तिरमावधूषु नितरां कामातुरा मानवा–
स्तप्तास्त्वन्नखकान्तिचन्दनरसैरालिप्य गात्रं निजम् ।
त्वत्पादाब्जरुचिप्रवालनिचिते भूमीतले शेरते
नित्यं देवि भवत्कृपाप्रियसखीविश्वासतः केवलम् ॥

வித்யா முக்தி ரமாவதூஷு நிதராம் காமாதுரா மானவாஸ் –
தப்தாஸ்த்வந்நக காந்தி சந்தன ரஸைராலிப்ய காத்ரம் நிஜம்
த்வத்பாதாப்ஜருசிப்ரவாலநிசிதே பூமிதலே சேரதே
நித்யம் தேவி பவத்க்ருபாப்ரியஸகீவிச்வாஸத: கேவலம்

தேவியே! வித்யை, முக்தி, ஸம்பத்து என்கிற சுந்தர ஸ்திரீகளின் மீது மிகுந்த காம வேகம் கொண்ட மனிதர்கள் உன் ஸ்ரீபாத நகங்களின் காந்தி என்கிற சந்தனம், பன்னீர் போன்ற த்ரவியங்களைத் தங்கள் சரீரத்தின் மீது பூசிக் கொள்கின்றனர். மேலும் அவர்கள் உன் ஸ்ரீபாத கமலங்களின் அதிபிரகாசம் என்கிற இளந்தளிர்கள் பரப்பப்பட்ட பூமியில் படுக்கின்றனர். உன் கிருபை என்கிற பிரிய தோழியின் மீது மட்டும் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.✵

✵ஜனங்கள் வித்யை முக்தி ஸம்பத்து என்கிற மூன்று விஷயங்களை அடையும் பொருட்டு உன் ஸ்ரீபாதத்தை நமஸ்கரிக்கின்றனர். இம் மூன்று விஷயங்களையும் சுந்தர ஸ்திரீகளாக உருவகப்படுத்திய கவி அவைகளை அடைவதற்காக வெகுவாகத் தவிக்கும் காமாதுரர்களாக ஜனங்களை வர்ணிக்கிறார். அடையும் மார்க்கம்: சரீரத்தின் மீது வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்வது அதாவது ஸ்ரீபாத நகங்களின் காந்தி தங்கள் சரீரத்தின் மீது பரவுமாறு நமஸ்கரிப்பது ஸ்திரீகளை வசப்படுத்துவதற்காக நல்ல இளந்தளிர்கள் பரப்பப்பட்ட பூமியில் படுக்கின்றனர். அந்த இளந்தளிர்கள் ஸ்ரீபாதங்களின் தாங்கவொண்ணாப்

பிரகாசமே. தாங்கள் அடைய விரும்பும் ஸ்திரீகளின் பிரியமான தோழிகளின் மீது மட்டும்தான் நம்பிக்கை வைக்கின்றனர். மற்றவர்கள் இந்த விஷயத்தில் உதவ மாட்டார்கள் என்று. அந்த தோழிகள் யாரென்றால் உன் கிருபையே தான். உன் கிருபையை மட்டுமே நம்பி உன் ஸ்ரீபாதங்களில் ஜனங்கள் நமஸ்கரிக்கின்றனர். தங்கள் மனோ வாஞ்சிதங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக. தங்கள் யோக்கியதையையோ வேறு விஷயங்களையோ அவர்கள் நம்ப முடியாது என்பது தாத்பரியம்.

46. मञ्जीरक्वणितैः क्षिपन्निव मुहुः श्रीमन्नासशूद्रमै सूद्रमैं
दैत्येन्द्रं प्रहसन्निवारुणरुचा रुष्यन्निवास्मै भृशम् ।
धीरायां त्वयि निर्विकारमनसि त्वत्पाद एव स्फुटं
पुष्णन् वैरिविकारमेष महिषध्वंसी परित्रायताम् ॥

மஞ்ஜீரக்வணிதை: க்ஷிபன்னிவமுஹு: ஸ்ரீமந்நகாம்சூத்கமைர்
தைத்யேந்த்ரம் ப்ரஹஸன்னிவாருணருசா ருஷ்யன்னி
வாஸ்மை ப்ருசம்
தீராயாம் த்வயி நிர்விகாரமனஸி த்வத்பாத ஏவ ஸ்புடம்
புஷ்ணன் வைரிவிகாரமேஷ மகிஷத்வம்ஸீ பரித்ராயதாம்

தேவியே! நீயோ தைரியமுள்ளவள். உன் மனதோ (காமம், குரோதம், அகங்காரம் முதலிய) விகாரங்கள் முற்றும் இல்லாதது. உன் ஸ்ரீபாதம் மட்டும் மகிஷாஸுரன் என்ற விரோதியிடம் (கோபமாகிற) விகாரத்துடன் பிரகாசிக்கிறது.

அதாவது ஸ்ரீபாத சலங்கைகளின் ஒலி மகிஷாஸுரனை கடுஞ்சொற்களால் வைவது போலவும் ஸ்ரீபாத நகங்களின் அதிபிரகாசமான ஒளிக் கிரணங்களால் அடிக்கடி மகிஷாஸுரனைப் பரிகசிப்பது போலவும்: ஸ்ரீபாதத்தின் சிவந்த காந்தியானது மகிஷாஸுரன் மீது கோபத்தால் மிகுதியாகச் சிவந்தது போலவும் தோற்றமளிக்கிறது. அந்த ஸ்ரீபாதம் எங்களைக் காப்பாற்றட்டும்.

✱வேறு ஒரு புகலிடமும் எங்களுக்கு இல்லையாகையால் ஸ்ரீபாதம் எங்கள் தோஷங்களுக்காக எங்கள் மீது கோபம் கொள்ளாமல் எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற பிரார்த்தனை.

47. क्षिप्रं देवि शिरस्पदेन महिषं पिष्ट्वा ततोऽधस्पदं
दित्सन्त्यां त्वयि कण्ठ भञ्जनभिया कण्ठीरवे विद्रुते।
मेदिन्यामपि भीतिकम्पिततनौ प्रेमत्वराशालिना
शर्वेणैव निजाङ्कसीम्नि निहितं पादद्वयं ते जयेत् ॥

க்ஷிப்ரம் தேவி சிரஸ்பதேன மகிஷம் பிஷ்ட்வா ததோதஸ்பதம்
தித்ஸந்த்யாம் த்வயி கண்டபஞ்ஜனபியா கண்டீரவே வித்ருதே
மேதின்யாமபி பீதிகம்பித தனௌ ப்ரேமத்வராசாலினா
சர்வேணைவ நிஜாங்கஸீம்னி நிஹிதம் பாதத்வயம் தே ஜயேத்

மகிஷாஸுரமர்த்தினியே! நீ மகிஷாஸுரனுடைய சிரஸின் மீது வேகமாக உன் ஸ்ரீபாதத்தை வைத்து அவனைத் தவிடு பொடியாக்கி விட்டு பிறகு ஸ்ரீபாதத்தை கீழே வைப்பதற்கு உரிய இடத்தை தேடினாய். அப்போது உன் வாகனமாக சிங்கமானது (மகிஷாஸுரனை வதைத்த உன் ஸ்ரீபாதத்தினால்) தன்னுடைய கழுத்தும் துண்டிக்கப்பட்டு விடுமோ என்ற பயத்தில் ஓடி விட்டது

(கீழே பூமியில் வைக்கலாம் என்றால்) பூமியும் அதிக பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்தது (அதாவது ஏற்கனவே மகிஷாஸுரனுடைய பாத அதிர்ச்சியினால் சிரமமடைந்திருந்த பூமியானது வதத்தை முடித்த அம்பிகையின் ஸ்ரீபாதத்தைத் தாங்கினால் பிரளயமே வந்து விடுமோ என்கிற பயத்தில் பூமி நடுங்கி பூகம்பம் உண்டாகி விட்டது) அப்போது உன்னிடம் பிரேமை கொண்ட ஸ்ரீபரமேஸ்வரன் வேகமாக வந்து தன்னுடைய மடியின் மீது உன் இரு ஸ்ரீபாதங்களையும் எடுத்து வைத்துக் கொண்டார். அப்பேர்ப்பட்ட ஸ்ரீபாதங்கள் போற்றி.!

48. पूर्वं देवि पदाम्बुजेन महिषप्रध्वसनाभ्यासतः
पश्चात् कुत्सितसुम्भदैत्यविजयोऽप्येवं कृतः किं त्वया।
नो चेद्भाति कथं कुसुम्भविजयी पादाग्रदेशोऽयमि–
त्यालापे गिरिशस्य तद् विजयते मन्दस्मितं देवि ते ॥

பூர்வம் தேவி பதாம்புஜேன மகிஷப்ரத்வம்ஸனாப்யாஸத:
பஸ்சாத் குத்ஸிதஸும்பதைத்ய விஜயோப்யேவம் க்ருத: கிம் த்வயா
நோ சேத்பாதி கதம் குஸும்பவிஜய பாதாக்ரதேசோயமித்
யாலாபே கிரிசஸ்ய தத் விஜயீதே மந்தஸ்மிதம் தேவி தே

பகவதியே! உன் ஸ்ரீபாதத்தினால் முன்னால் நீ மகிஷாஸுரனை வதம் செய்து அப்யாஸம் (பயிற்சி) செய்து கொண்டு விட்டாய்.

பின்னர் கெட்ட புத்தி கொண்ட சும்பாஸுரனை (குஸும்பனை) ஜயித்த போது இவ்வாறே நீ செய்தாயோ (அதாவது பயிற்சி பெற்ற ஸ்ரீபாதத்தினால் வதம் செய்தாயோ), ✱அப்படியில்லாவிடில் உன் ஸ்ரீபாதப் பிரதேசமானது எவ்வாறு குஸும்ப விஜயீயாக (அதாவது குஸும்பம் என்கிற புஷ்பத்தை சோபையில் மிஞ்சக்கூடியதாக) பிரகாசிக்கிறது என்று ஸ்ரீபரமேஸ்வரன் (கிரிசன்) (பரிகாசமாக) சிலேடையாக பேசும் போது நீ பதிலுக்கு புன்னகை புரிந்தாய். அந்த புன்னகை போற்றி.!

✱சும்பாஸுரனை தேவி ஸ்ரீபாதத்தினால் வதம் செய்யவில்லை. அவனுடைய மார்பில் சூலத்தால் குத்திப் பிளந்து பூமியில் வீழ்த்தினாள் என்ற வரலாறு தேவி மாகாத்மியத்தில் உள்ளது.

49. विभ्राणेन मनोज्ञयावकरसं मञ्जुध्वनिं नूपुर–
श्लेषालंकृतिशालिना नखमणीजातप्रसादश्रिया ।
एकेनैव पदेन देवि महिषध्वंसे महीयस्तरः
श्लोकोऽयं रचितस्त्वयेति विबुधाः संश्लाघनं कुर्वते ॥

பிப்ராணேன மனோக்ஞயாவகரஸம் மஞ்சுத்வனிம் நூபுர
ச்லேஷாலங்கிருதிசாலினா நகமணீஜாதப்ரஸாத ச்ரியா
ஏகேனைவ பதேன தேவி மகிஷத்வம்ஸே மஹீய்த்ர:
ச்லோகோயம் ரசிதஸ்த்வயேதி விபுதா: ஸம்ச்லாகனம் குர்வதே

தேவியே! நீ மகிஷாஸுரனை ஒரே ஒரு ஸ்ரீபாதத்தினால் (பதத்தினால்) வதம் செய்து அதி மகிமை வாய்ந்த கீர்த்தியை (சுலோகத்தை) சம்பாதித்தாய் என்று ஞானிகள் (பண்டிதர்கள்) சிலாகித்துப் பேசுகிறார்கள். அந்த ஸ்ரீபாதம் (அல்லது பதம் அதாவது வார்த்தை) அதிரமணீயமான செம்பஞ்சுப்பூச்சு பொருந்தியது (லாக்ஷாரஸம்). இனிமையான சலங்கை சப்தம் கொண்டது (சுலோகத்தைப் பார்க்குமிடத்து சிருங்காரம் முதலிய ரஸங்களுடனும் வ்யங்க்யம் அதாவது குறிப்பாகச் சொல்லுதல் முதலிய த்வனிகளுடனும் கூடி காவிய ரஸம் மிகுந்திருக்கிறது). சலங்கை போன்ற அலங்காரங்களுடன் கூடியது ஸ்ரீபாதம். (சுலோகத்தைப் பார்குங்கால் சிலேடை முதலிய அலங்காரங்களுடனும் பிரஸாதம் முதலிய குணங்களுடனும் அழகுற்றிருக்கிறது)

✱கவி இங்கு பாதம், பதம் என்று சிலேடையை உபயோகிக்கிறார். ஒரே ஸ்ரீபாதத்தினால் அசுரனை வதம் செய்து கீர்த்தியைச் சம்பாதித்தது ஒன்று. ஒரே பதத்தினால் அதாவது வார்த்தையினால் சுலோகம் செய்தது மற்றொன்று. சுலோகம் செய்யப் பல பதங்கள் சாதாரணமாகத் தேவைப்பட்ட போதிலும் தேவிக்கு ஒரு பதமே போதுமானதாக உள்ளது என்பது தாத்பரியம்.

50. त्वं शम्भोर्महिषी भवस्यगसुते तेनोपहासाय ते
दैत्योऽयं महिषीभवन्नुपगतः सोऽयं कथं क्षम्यते ।
इत्थं नूपुरनिस्वनैरिव वदन् पाद स्त्वदीयो रुषा
शस्त्रप्रग्रहणात् पुरैव महिषं पिष्णन् परित्रायताम् ॥

த்வம் சம்போர்மகிஷீ பவஸ்யகஸுதே தேனோபஹாஸாய தே
தைத்யோயம் மகிஷீபவன்னுபகத: ஸோயம் கதம் க்ஷம்யதே
இத்தம் நூபுரநிஸ்வனைரிவ வதன் பாதஸ்த்வதீயோ ருஷா
சஸ்த்ரப்ரக்ரஹணாத் புரைவ மகிஷம் பிஷ்ணன் பரித்ராயதாம்.

பர்வதகுமாரியே!★ நீ ஸ்ரீசம்புவின் மகிஷியாக (பத்னியாக) இருக்கிறாய். (காளை வாகனம் கொண்ட ஸ்ரீபரமேஸ்வரனின் பத்னியாக நீ இருக்கிறாய்) அதனால் மகிஷாஸுரன் மகிஷ வேஷம் (எருமை உருவம்) கொண்டு உன்னைப் பரிகாசம் செய்வது போல் வந்தான். அவன் எவ்வாறு மன்னிக்கப்பட தகுதியுள்ளவனாக ஆவான், என்று உன்னுடைய ஸ்ரீபாதம் தன் சலங்கையினுடைய சப்தத்தையே பேச்சாகக் கொண்டு, ஆயுதங்களைக் கையில் ஏந்திக் கொள்வதற்கு முன்னமேயே மகிஷாஸுரனைப் பொடி பொடியாக்கிற்று. ★ அந்த ஸ்ரீபாதம் (வேறு புகலிடமில்லாத) எங்களைக் காப்பாற்றுவதாகுக.

★யுத்தத்தில் வாயினால் பேசுவதற்கு பதிலாக சலங்கை ஒலி பேசிற்று. கையிலுள்ள ஆயுதங்களினால் யுத்தம் செய்வதற்கு பதிலாக ஸ்ரீபாதத்தினாலேயே வதம் நிகழ்ந்தது என்பது தாத்பரியம்.

51. देव्या पङ्कशयोऽद्य कोपि महिषच्छ द्मा महान् कण्टकः
पादेनाहत इत्युदूढ हसितं सख्या समावेदिते ।
सद्यः कण्टकशालिना करतलेनासाद्य पादाम्बुजं
गृह्णन्नार्तिविनोदनाय गिरिशो जीयात् प्रियस्ते शिवे ॥

தேவ்யா பங்கசயோத்ய கோபி மகிஷச்சத்மா மகான் கண்டக:
பாதேனாஹத இத்யுதாடஹஸிதம் ஸக்யா ஸமாவேதிதே
ஸத்ய: கண்டகசாலினா கரதலேனாஸாத்ய பாதாம்புஜம்
க்ருஹணன்னார்த்தி வினோதனாய கிரிசோ ஜீயாத் பரியஸ்தே சிவே

சங்கரியே! மகாபாபியும் மகிஷ வேஷம் பூண்டவனுமான பெரிய முள்ளானது (சத்துருவானவன்) ✱இப்போது தேவியினுடைய ஸ்ரீபாதத்தினால் ஒடுக்கப்பட்டான் என்று சிரித்துக் கொண்டே உன் தோழி ஸ்ரீபரமேஸ்வரனிடம் தெரிவித்தாள். உடனே அவர் உனக்கு புளகாங்கிதம்✱ உண்டு பண்ணக்கூடிய தன்னுடைய கரத்தினால் உன் ஸ்ரீபாதாரவிந்தத்தை சிரமம் நீக்குவதற்காக தாங்கிப் பிடித்துக் கொண்டார். அப்பேர்ப்பட்ட ஸ்ரீபரமேஸ்வரன் உனக்குப் பிரியமானவராக இருந்து கொண்டு பிரகாசிக்கிறார்.

✱கண்டகம் என்கிற பதத்திற்கு இரு அர்த்தங்கள் உண்டு. முள் புளகாங்கிதம். தேவியின் ஸ்ரீபாதத்னால் மகிஷாஸுரன் என்ற முள் அழிக்கப்பட்டது என்று கேள்வியுற்ற ஸ்ரீபரமேஸ்வரன் கையில் இன்னொரு முள்ளை எடுத்துக் கொண்டு (முள்ளை முள்ளால் எடுப்பதற்காக) ஸ்ரீபாதத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

✱✱பிரம்மா, விஷ்ணு முதலியவர்களுக்கு உன் ஸ்ரீபாதத்தை ஸ்பரிசிக்கும் பாக்கியம் கிடைக்காது. ஸ்ரீபரமேஸ்வரனுக்கு மட்டும் மிகப் பிரியமானவராகையால் இந்த பாக்கியம் கிட்டியதென்று தாத்பரியம்.

52. त्वत्पादाङ्गुलिपल्लवैरगसुते देवि स्वयं पञ्चभि:
पञ्चत्वं गमितो महासुर इति स्वात्मानुरूपं कृतम् ।
एतैरेव नतो जनस्त्रिदशतां नीतो महेशः पुन–
र्लक्षत्वं गमितः प्रसूनधनुषो विस्मापनं तद् द्वयम् ॥

த்வத் பாதாங்குலிபல்லவைரகஸுதே தேவி ஸ்வயம் பஞ்சபி:
பஞ்சத்வம் கமிதோ மஹாஸுர இதி ஸ்வாத்மானுரூபம் க்ருதம்
ஏதைரேவ நதோ ஜனஸ்த்ரிதசதாம் நீதோ மஹேச: புனர்
லக்ஷத்வம் கமித: ப்ரஸூனதனுஷோ விஸ்மாபனம் தத் த்வயம்

பர்வதகுமாரியே! தேவியே! உன் ஸ்ரீபாத விரல்கள் என்கிற ஐந்து தளிர்க் கொடிகளாலும் மகா அசுரனான மகிஷாஸுரன் மரணத்தை (பஞ்சத்வத்தை) அடைந்தான் (உயிர் பிரிந்த பின் சரீரம் பஞ்ச பூதங்களாக பிரிந்து விடுகிறது) அதாவது விரல்கள் ஐந்தும் மகிஷாஸுரனை தன்னைப் போலவே ஐந்தாகச் செய்தன. ஆனால் ஸ்ரீபாதங்களில் நமஸ்கரிக்கும் மனிதர்கள் தேவ பதவியை (த்ரிதசத் தன்மை - முப்பதாவது) இந்த ஐந்து விரல்களைக் கொண்டே அடைந்து விடுகின்றனர். ஸ்ரீமகேஸ்வரனும் புஷ்பங்களை வில்லில் பூட்டிய மன்மதனுக்கு லக்ஷயம். அதாவது இலக்கு ஆகிவிடும் தன்மையை (இந்த ஐந்து விரல்களைக் கொண்டே) (லக்ஷம் என்கிற எண்ணிக்கையை) அடைந்து விடுகிறார். இந்த இரண்டும் ஆச்சரியமாக இருக்கிறது.

ஸ்ரீபாதத்தின் ஐந்து விரல்கள் மகிஷாஸுரனை ஐந்தாகும் படிச் செய்தன. அதை விட ஆச்சரியந்தரவல்ல இரண்டு விஷயங்கள்:-

நமஸ்கரிக்கும் பக்த ஜனங்களுக்கு தேவ பதவியை (அல்லது முப்பதாகும் தன்மையை) அளித்து விடுகின்றன. அதாவது ஐந்து விரல்கள் முப்பதை அளிக்கின்றன. விரல்களை நோக்கிய ஸ்ரீபரமேஸ்வரனுக்கு மன்மதனுக்கு லக்ஷியமாகும் தன்மையை (அல்லது லக்ஷம் என்கிற எண்ணிக்கையை) கொடுக்கின்றன.

53. ब्राह्मं माघवनं च वाहनमहो मन्दैर्गतैर्निन्दितं
धावल्येन नखत्विषां विहसितो वाहोऽपि माहेश्वर: ।
इत्थं वाहनवैरितां भजति ते पादस्ततो मन्महे
कात्यायन्यमुना न्यघानि महिष: कार्तान्त वाहभ्रमात् ॥

ப்ராம்மம் மாகவனம் ச வாகனமகோ மந்தைர்கதைர்நிந்திதம்
தாவல்யேன நகத்விஷாம் விஹஸிதோ வாகோபி மாஹேஸ்வர:
இத்தம் வாகனவைரிதாம் பஜதி தே பாதஸ்ததோ மன்மஹே
காத்யாயன்யமுனா ந்யகானி மகிஷ: கோர்த்தாந்த வாகப்ரமாத்

காத்யாயனியே! பிரம்மாவின் வாகனமாகிற ஹம்ஸமும் தேவேந்திரனின் வாகனமாகிற ஐராவதமும் (வெள்ளை யானை) உன் ஸ்ரீபாதத்தின் மெதுவான (அழகிய) நடையினாலும் பாத நகங்களாகிற மணிகளின் பளீரென்ற வெண்மைப் பிரகாசத்தாலும் நிந்திக்கப்பட்டன. (அதாவது தோற்கடிக்கப்பட்டன). ஸ்ரீமகேஸ்வரனின் வாகனமாகிய விருஷபமும் அது போலவே பரிகசிக்கப்பட்டது. இவ்வாறாக உன் ஸ்ரீபாதம் பிற வாகனங்களுடன் விரோதத் தன்மை அடைந்திருக்கிறது, அதனால் உன் ஸ்ரீபாதத்தினால் மகிஷாஸுரனானவன் யமனுடைய வாகனமாகிற எருமைமாடு என்கிற குழப்பத்தினால் கொல்லப்பட்டான் என்றே நாங்கள் நினைக்கின்றோம்.✱

✱மகிஷாஸுரன் எருமை மாடு உருவத்தில் வந்ததினால் ஸ்ரீபாதமானது யமனுடைய வாகனமாகிற எருமை என்கிற குழப்பத்தில் கொன்று விட்டது என்று பொருள்.

54. सीमन्तप्रकरे सुरेन्द्रसुदृशां सिन्दूररेखात्मना
माणिक्यद्युतिसंज्ञयैव मकुचीकोटीषु दैत्यद्रुहाम् ।
शम्भोर्मूर्ध्नि जटाघटारुणरुचिव्याजेन पादप्रभै–
वैका ते परिणाममेति करुणामूर्ते गिरीन्द्रात्मजे ॥

ஸீமந்தப்ரகரே ஸுரேந்த்ரஸுத்ரஸுத்ருசாம் ஸிந்தூரரேகாத்மனா
மாணிக்யத்யுதிஸம்ஞயைவ மகுடீகோடீஷு தைத்யத்ருஹாம்
சம்போர் மூர்த்னி ஜடாகடாருணருசிவ்யாஜேன பாதப்ரபை –
வைகா தே பரிணாமமேதி கருணாமூர்த்தே கிரீந்த்ராத்மஜே

★ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்ஜனம், புஷ்பதந்தம், ஸார்வபௌமம், சுப்ரதீகம் என்பவை அஷ்டதிக்கஜங்கள்.

★★உத்தம யானைகளின் சிரஸிலிருந்து குங்குமம் உற்பத்தியாகி வெளியாகும் என்று சொல்லப்படுகிறது.

57. त्वत्पादोऽयमजाश्रितश्च रुचिरस्पर्शान्वितो योगिना–
मन्तः स्थाकृतिरूष्मभाक् च महिषप्रध्वंसनप्रक्रमे ।
एवं खल्वखिलाक्षरात्मकममुं शैलेन्द्रकन्ये कथं
भाषन्ते नतवर्गबन्धुमपवर्गालम्बनं वा जनाः ॥

த்வத்பாதோயமஜாச்ரிதஸ்ச ருசிரஸ்பர்சான்விதோ யோகினா
மந்த: ஸ்தாக்ருதிரூஷ்மபாக்ச மகிஷப்ரத்வம்ஸனப்ரக்ரமே
ஏவம் கல்வகிலா க்ஷராத்மகமமும் சைலேந்திரகன்யே கதம்
பாஷந்தே நதவர்கபந்துமபவர்காலம்பனம் வா ஜனா:

பர்வதராஜபுத்திரியே! உன் ஸ்ரீபாதம் பிரம்மாவினால் (அல்லது மன்மதனால்) ஆச்ரயிக்கப்பட்டது. அதி மிருதுவான ஸ்பரிசத்துடன் கூடியது. யோகிகளுடைய அந்தக்கரணத்தால் இருக்கக் கூடியது. மகிஷாஸுரனுடைய வதத்தின் காரணத்தினால் மிகுந்த பெருமையுடன் பிரகாசிப்பது.

இவ்விதமாக அகில ரூபமாகவும் நித்தியமாகவும் பிரகாசிக்கும் ஸ்ரீபாதத்தை ஜனங்கள் எவ்வாறு வர்ணிப்பார்கள்:

நமஸ்கரிக்கும் (பக்த) ஜனங்களுக்கு அபயமளித்துக் காப்பவர் என்றா அல்லது மோக்ஷத்தை வழங்குபவர் என்றா (மேலே சொன்னது ஒரு அர்த்தம். கவியின் சிலேடையினால் மற்றொரு அர்த்தமும் கிடைக்கிறது. அது பின்வருமாறு)

உன் ஸ்ரீபாதம் அகாரம் முதல் ஔகாரம் வரை உள்ள (உயிர்) எழுத்துக்களின் புகலிடம் (அதாவது ஸகல

வித்யைகளின் இருப்பிடம்) ககாரம் முதல் மகாரம் வரை உள்ள ரமணீயமான ஸ்பர்ச (மெய்) எழுத்துக்களுடன் சேர்ந்தது. ய ர ல வ ஆகிய அந்தஸ்த எழுத்துக்களின் உருவம் உடையது. ச ஷ ஸ ஹ ஆகிய 'ஊஷ்மாண' எழுத்துக்களால் பிரகாசிப்பது. இவ்வாறாக எல்லா அக்ஷரங்களின் உருவமாகவும் இருக்கும் ஸ்ரீபாதத்தை ஜனங்கள் எவ்வாறு வர்ணிப்பார்கள். 'த' காரம் முதலிய ஐந்து எழுத்துக்களின் உறைவிடம் இல்லை என்றா அல்லது 'ப' காரம் முதலிய ஐந்து எழுத்துக்களின் புகலிடம் இல்லை என்றா.✵

ஸகல வேதங்கள் வேதாங்கங்கள் முதலிய ஸகல வித்யைகளின் இருப்பிடமாக உள்ள ஸ்ரீபாதத்தில் அந்த வித்யை இல்லை, இந்த வித்யை இல்லை என்று யாரும் வர்ணிக்க மாட்டார்கள் என்பது தாத்பரியம்.

58. उन्मीलन्नखमण्डलीहिमकणः शोणप्रभागैरिकं
बिभ्राणः परिशोभमानकटको भूयोवनैकाश्रयः :
गायत्सिद्धवधूनिषेविततलः पादस्त्वदीयः शिवे
राजत्येष हिमाद्रिपादवदिदं युक्तं हिमाद्रेः सुते ॥

உன்மீலன் நகமண்டலீஹிமகண: சோணப்ரபானகரிகம்
பிப்ராண: பரிசோபமானகடகோ பூயோவனைகாச்ரய:
காயத்ஸித்தவதூநிஷேவிததல: பாதஸ்த்வதீய: சிவே
ராஜத்யேஷ ஹிமாத்ரிபாதவதிதம் யுக்தம் ஹிமாத்ரே: ஸுதே

சங்கரியே! ஹிமகிரிபுத்திரியே! உன் ஸ்ரீபாத கமலம் ஹிமயமலையின் பாதம் போல் பிரகாசிக்கிறது. ஸ்ரீபாதமானது பிரகாசிக்கின்ற நகவரிசையைக் கொண்டது. ஹிமயமலையும் பிரகாசிக்கின்ற பனித்துளிகளைக் கொண்டது. ✵ சிவந்த பிரகாசத்துடன் கூடிய ஸ்ரீகிரிஜாவைத் தாங்கிக் கொண்டிருப்பது ஸ்ரீபாதம். சிவந்த பிரகாசத்துடன் விளங்கும் மலைப் பிரதேசங்களைக்

கொண்டது ஹிமயமலை. அதிக சோபையுடன் விளங்கும் சலங்கையைக் கொண்டது ஸ்ரீபாதம். அதிக சோபையுடன் விளங்கும் மலைச் சாரல்களைக் கொண்டது ஹிமயமலை. அடிக்கடி (பக்தர்களை) பரிபாலிப்பதில் ஒரே புகலிடம் ஸ்ரீபாதம். அநேக வனங்களின் உறைவிடம் ஹிமயமலை. பாடிக்கொண்டு வரும் சித்த ஸ்திரீகள் சேவைக்காக எங்கு வருகிறார்களோ அந்த இடம் ஸ்ரீபாதம். பாடிக்கொண்டு வரும் ஸ்திரீகளுடன் கூடிய சித்தர்கள் உறையும் இடம் ஹிமயமலை (இவ்வாறு ஹிமயமலைக்கும் உன் ஸ்ரீபாதத்திற்கும்) வெகு பொருத்தம் இருக்கிறது.

★கவியின் சிலேடை ஸ்ரீபாதத்திற்கும் ஹிமயமலைக்கும் பொருந்துமாறு அமைந்துள்ளது.

59. दिक्पालैर्दशभिः पृथक्पृथगयं त्वत्पादयोरर्पितो
दृश्यो भक्त्यनुराग एव दशधा शोणाङ्गुलिश्रीमिषात् ।
पादाभ्यामपि तान् प्रति प्रकटिता नूनं प्रसादाङ्कुरा
दृश्यन्ते नखकान्तिपङ्क्तिदशकव्याजेन शैलात्मजे ॥

திக்பாலைர்தசபி: ப்ருதக்ப்ருதகயம் த்வத்பாதயோரர்பிதோ
த்ருச்யோ பக்த்யனுராக ஏவ தசதா சோணாங்குலிஸ்ரீமிஷாத்
பாதாப்யாமபி தான் ப்ரதி ப்ரகடிதா நூனம் ப்ரஸாதாங்குரா
த்ருச்யந்தே நககாந்திபங்க்திதசகவ்யாஜேன சைலாத்மஜே

பார்வதியே! பத்து திக்பாலகர்களாலும்★ தனித்தனியாக உன் ஸ்ரீபாதத்தில் பக்தியும் அனுராகமும் (அதாவது மிகுந்த பிரியம் அல்லது சிவந்த லாக்ஷாரஸப்பூச்சு) அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இது உன் ஸ்ரீபாதத்தின் சிவந்து பிரகாசிக்கின்ற பத்து விரல்களின் மூலம் தெரிய வருகிறது (அதாவது பத்து திக்பாலர்களுடைய ஸ்ரீபாத பக்தியென்பது ஸ்ரீபாதத்தில் உள்ள பத்து விரல்கள் என்கிற வியாஜத்தின் மூலம் அது

தெரிய வருகிறது). ஸ்ரீபாதங்களுக்கு அந்த திக்பாலகர்களிடம் உள்ள அனுக்ரஹம் என்கிற மொட்டுக்களும் பிரகாசிக்கின்ற பத்து நகங்களின் வரிசை என்கிற வியாஜத்தின் மூலம் நிச்சயமாகத் தெரிய வருகின்றது.✱✱

✱அஷ்டதிக்பாலகர்களாவர் கிழக்கு - இந்திரன், தென்கிழக்கு - அக்கினி, தெற்கு - யமன், தென்மேற்கு - நிருதி, மேற்கு - வருணன், வடமேற்கு - வாயு, வடக்கு - குபேரன், வடகிழக்கு - ஈசானன், மேல் கீழ் என்கிற இரு திசைகளின் பாலகர்களாக பிரம்மா, விஷ்ணு இருவர்களையும் சேர்த்து பத்து திக்பாலகர்களாக கவி வர்ணிக்கிறார்.

✱✱பகவதிக்கு உள்ள விசேஷமான பக்த வாத்சயல்யத்தை இவ்வாறு கவி சுட்டிக் காட்டுகிறார். அடுத்து வரும் 10 சுலோகங்களிலும் 10 திக்பாலகர்களுடைய பிரார்த்தனைகளும் இடம் பெறுகின்றன.

60. मेघानां कुलिशस्य चाप्रतिहता धाराः क्रमन्तां चिरं
नो दृश्येत च दानवारिविभवो नाकस्य नागस्य च ।
पुत्रोऽस्यं मम सैनिकाश्च दधतां नित्यं जयन्तः सुखं
त्वत्पादाम्बुजपातिनः सुरपतेरित्थं जयन्त्यर्थनाः ॥

மேகானாம் குலிசஸ்ய சாப்ரதிஹதா தாரா: க்ரமந்தாம்சிரம்
நோ த்ருச்யேத ச தானவாரிவிபவோ நாகஸ்ய நாகஸ்ய ச
புத்ரோயம் மம ஸைநிகாஸ்ச தததாம் நித்யம் ஜயந்த: ஸுகம்
த்வத்பாதாம்புஜபாதின: ஸுரபதேரித்தம் ஜயந்த்யர்த்தனா:

தேவியே! உன் ஸ்ரீபாத கமலத்தில் விழுந்து நமஸ்கரிக்கும் (கீழ்த்திசைக்காவலனான) தேவேந்திரன் இவ்வாறு பிரார்த்திக்கிறான். மேகங்களும் இடியும் (வஜ்ராயுதமும்) தங்கு தடையில்லாமல் தாரையாக வெகு காலத்திற்கு (கல்ப காலத்திற்கு) பெருகட்டும்.

ஸ்வர்க்கத்திற்கும் (என்னுடைய வாகனமான) ஐராவதம் என்கிற யானைக்கும் ராக்ஷஸர்கள் முதலிய எதிரிகளால் அவமானம் ஏற்படாதிருக்கட்டும்.

என்னுடைய புத்திரனான ஜயந்தனும் ஜயத்தையே காணும் சேனைகளும் எப்போதும் சுகமாக இருக்கட்டும். தேவேந்திரனுடைய பிரார்த்தனைகள் (உன் கடாக்ஷத்தினால்) ஜயத்தையே பெறுகின்றன.

61. आज्यासक्तकरैर्द्विजन्मभिरहं हूयेय नो दानवैः
स्वाहारोचितमस्तु पार्श्वमनिशं तादृक् च हव्यं मम।
रक्षावानिति भूतिमानितिच मे शब्दप्रसिद्ध्या शिवे
नोपेक्ष्योऽहमिति त्वदङ्घ्रिनमने जीयासुरग्नेर्गिरः॥

ஆஜ்யாஸக்தகரைர்த்விஜன்மபிரஹம் ஹூயேய நோ தானவை:
ஸ்வாஹாரோசிதமஸ்து பார்ஸ்வமனிசம் தாத்ருக் ச ஹ்வயம் மம
ரக்ஷாவானிதி பூதிமானிதி ச மே சப்தப்ரஸித்யா சிவே
நோபேக்ஷ்யோஹமிதி த்வதங்க்ரிநமனே ஜீயாஸுரக்னோகிர:

சங்கரியே! உன் ஸ்ரீபாத கமலத்தில் நமஸ்கரிக்கும் (தென் கிழக்கு திசைக் காவலனான) அக்கினி தேவன் பின்வருமாறு பிரார்த்திக்கிறார்.

நெய்யில் தோய்ந்த கரங்களுடன் விளங்கும் பிராம்மணர்களால் நான் ஹோமம் செய்யப்படட்டும். வில் ஏந்திய கரங்களைக் கொண்ட ராக்ஷஸர்களால் அல்ல. என் பக்கத்தில் இடைவிடாமல் எப்போதும் (என் பத்தினியான) ஸ்வாஹா தேவியானவள் பிரகாசிக்கட்டும். என்னுடைய ஹவ்யமும் (அதாவது ஹோமதிரவ்யமும்) அவ்வாறே

(அதாவது நான் ஸ்வாஹா தேவியுடன் பிரகாசிக்கும் போதே) கிடைக்கட்டும். அக்கினியானவன் ரக்ஷிக்கும் சக்தியுடையவன், ஸம்பத்து உள்ளவன் என்ற வார்த்தைகளால் பிரசித்தியடைந்து நான் உன்னால் உதாசீனப்படுத்தப்படக்கூடாது. ✷ அக்கினித் தேவனுடைய பிரார்த்தனைகள் (உன் அனுக்ரஹத்தினால்) பலிக்கட்டும்.

✷இன்னொரு அர்த்தம் "அக்கினியானவன் எல்லாவற்றையும் தின்று விடுவான். பஸ்மமாக்கி விடுவான்" என்கிற அபகீர்த்தி எனக்கு இருக்கிறபடியால் உன் ஸ்ரீபாதத்தை தவிர வேறு சரணாகதி எனக்கில்லை.

62. त्वद्भक्ताघमबुद्धिपूर्वलिखितं स्याच्चेत्क्षमेथाः शिवे
कान्तस्ते मयि रोषवान् कुरु पुनस्तस्यार्द्रभावं शनैः ।
देवि त्वं महिषाभिहन्त्रि चकितं त्रायस्व मे वाहनं
कालस्येति जयन्ति ते पदनतौ लोलस्य सम्प्रार्थनाः ॥

த்வத்பக்தாகமபுத்திபூர்வலிகிதம் ஸ்யாச்சேதக்ஷ மேதா: சிவே
காந்தஸ்தே மயி ரோஷவான் குரு புனஸ்தஸ்யார்த்ரபாவம் சனை:
தேவி த்வம் மகிஷாபிஹந்த்ரி சகிதம் த்ராயஸ்வ மே வாகனம்
காலஸ்யேதி ஜயந்தி தே பதநதௌ லோலஸ்ய ஸம்ப்ரார்த்தனா:

திரிபுரசுந்தரியே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் (தென் திசைக் காவலனான) யமதர்மராஜன் பின்வருமாறு பிரார்த்திக்கிறார்.

உன் பக்தர்களுடைய பாபங்களை புத்தியில்லாமல் (சித்திரகுப்தன்) எழுதியிருப்பானாகில் நீ என்னை க்ஷமித்து விடு. ✷உன் மணாளனான ஸ்ரீபரமேஸ்வரன் என்னிடம் கோபங்கொண்டிருக்கிறார். ✷✷அவரைக் கொஞ்சம் கொஞ்சமாக என்னிடம் (தயையினால்) நனையும் படி

செய்வாயாக. தேவியே! நீயோ மகிஷ உருவம் கொண்ட அசுரனை வதம் செய்தவள். இதனால் பயந்து கொண்டிருக்கிற என்னுடைய மகிஷ வாகனத்தைக் காப்பாற்றுவாயாக. இவ்வாறு வியாகூலத்துடன் செய்யப்பட்ட காலனின் பிரார்த்தனைகள் (உன் கடாக்ஷத்தினால்) பலிக்கின்றன.

*பாபியாகிலும் உன் ஸ்ரீபாதத்தை தஞ்சமடைந்து விட்ட பிறகு பரிசுத்தமாக ஆகி விடுகிறான் என்று தாத்பரியம்.

**மேற்சொன்னது போலவே ஸ்ரீபரமேஸ்வர பக்தர்களுடைய பாபங்கள் விஷயத்திலும் (சித்திரகுப்தன்) எழுதியிருப்பானாகில் அதனால் ஸ்ரீபரமேஸ்வரன் என் மீது கோபங்கொண்டுள்ளார். மார்க்கண்டேயன் முதலிய பக்தர்கள் விஷயத்தில் ஸ்ரீபரமேஸ்வரன் என் மீதுள்ள கோபத்தைக் காட்டியுள்ளார் என்பது தாத்பரியம்.

63. धर्माचारपरोऽयमित्यवमतो रक्षोभिरेकान्वयै–
र्मह्यं वेदविनिन्दितां दिशमदुर्जाति द्विषश्चामराः ।
दैवादित्युभयच्युतो विशरणो रक्ष्योहमित्यादय–
स्त्वत्पादप्रणतौ जयन्ति निर्ऋतेरत्याकुलाः प्रार्थनाः ॥

தர்மாசாரபரோய மித்யவமதோ ரக்ஷோபிரேகாந்வயைர்
மஹ்யம் வேதவிநிந்திதாம் திசமதுர்ஜாதித்ஷஸ்சாமரா:
தைவாதித்யுபயச்யுதோ விசரணோ ரக்ஷ்யோஹமித்யாதயஸ்
த்வத்பாதப்ரணதௌ ஜயந்தி நிர்ருதேரத்யாகுலா: ப்ராத்தனா:

தேவியே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் (தென் மேற்குத் திசைக் காவலனான) நிருருதியின் பிரார்த்தனைகள் பின்வருமாறு:

என்னோடு ஒரே குலத்தைச் சார்ந்த ராக்ஷஸர்களால் நான் தர்மாசாரங்களைப் பின்பற்றுபவன் என்று அவமானப்படுத்தப்படுகிறேன். நிரந்தரமான ராக்ஷஸ ஜாதியிடம் பகை பூண்டுள்ள தேவர்களோ எனக்கு

வேதங்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட (தென்மேற்கு திசையைத்) தந்துள்ளனர். இவ்வாறு துர்பாக்கியத்தினால் இரண்டு குலங்களாலும் (அதாவது ராக்ஷஸர்கள் தேவர்கள் ஆகிய இரு குலங்களாலும்) கைவிடப்பட்ட நான் வேறு கதியில்லாதவன் (உன் ஶ்ரீபாத கமலத்தை விட்டு வேறு கதியில்லை என்று பொருள்) உன்னால் ரக்ஷிக்கப்பட வேண்டியவன். இவ்வாறாக வெகு வியாகூலத்துடன் செய்யப்பட்ட நிருருதியின் பிரார்த்தனைகள் (உன் கடாக்ஷத்தினால்) பலிதமடைகின்றன.

64. मत्पुत्र्या मम वा मुकुन्दगृहताभाग्यं न संक्षीयतां
माहं पायिषि कुम्भजेन मुनिना कल्पान्तसूर्येण वा ।
द्वेधा मे सुरवाहिनीदयितता साधु त्वया रक्ष्यतां
त्वत्पादाम्बुजपातिनो जलपतेरित्थं जयन्त्यर्थनाः ॥

மத்புத்ர்யா மம வா முகுந்தக்ருஹதாபாக்யம் ந ஸம்க்ஷீயதாம்
மாஹம் பாயிஷி கும்பஜேன முனினா கல்பாந்தஸூர்யேண வா
த்வேதா மே ஸுரவாஹினீதயிததா ஸாது த்வயா ரக்ஷ்யதாம்
த்வத்பாதாம்புஜபாதினோ ஜலபதேரித்தம் ஜயந்த்யர்த்தனா:

சங்கரியே! உன் ஶ்ரீபாதார விந்தத்தில் விழுந்து நமஸ்கரிக்கும் (மேல்திசைக் காவலனான) வருணன் இவ்வாறு பிரார்த்திக்கிறார்.

என்னுடைய புத்திரிக்கும் (அதாவது புத்திரியான லக்ஷ்மிக்கும்) எனக்கும் ஶ்ரீவிஷ்ணுவின் கிருகமான வைகுண்டவாச பாக்கியம் குறைவில்லாமல் இருக்கட்டும். என்னை (குடத்தில் உதித்த) அகஸ்த்ய மகரிஷி குடித்து உறிஞ்சி விடாமல் இருக்கட்டும். ✱கல்ப முடிவில் (பிரளய காலத்தில் தகிக்கும் (பன்னிரண்டு) சூரியர்களால் நான் வற்றி விடாமல் இருக்க வேண்டும். நான் (சுரவாகினியான) மந்தாகினியின் கணவனாக இருத்தல் (சுரவாகினியான) தேவர்களுடைய சேனைக்கு அதிபதியாக இருத்தல் ஆகிய இரண்டையும் நீ நன்றாக காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறாக (ஜலபதியான) வருணனின் பிரார்த்தனைகள் பலிதமாகின்றன.

★அகஸ்த்திய மகரிஷி முன்பொருதரம் சமுத்திரஜலம் முழுவதையும் ஆசமனம் செய்து வற்றச் செய்து விட்டார் என்று புராணங்களில் சொல்லப்படுகிறது.

65. विश्वप्राणमयी त्वमेव मम तु प्राहुर्जगत्प्राणतां
सर्वस्यापि सदा गतिर्हि भवती मामेवमाहुर्जनाः ।
लज्जापादकमीदृशं जननि नः किं कुर्महे पाहि मा-
मित्येवं पवनस्य ते पदनतौ वाचो जयन्त्याकुलाः ॥

விஸ்வப்ராணமயீ த்வமேவ மம து ப்ராஹுர்ஜகத்ப்ராணதாம்
ஸர்வஸ்யாபி ஸதாகதிர்ஹி பவதீ மாமேவமாஹுர்ஜனா:
லஜ்ஜாபாதகமீத்ருசம் ஜனனி ந: கிம் குர்மஹே பாஹி மாம்
இத்யேவம் பவனஸ்ய தே பதநதௌ வாசோ ஜயந்த்யாகுலா:

தாயே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் (வடமேற்கு திசைக் காவலனான) வாயுதேவன் பின்வருமாறு பிரார்த்திக்கிறார்.

நீ தான் இந்த பிரம்மாண்டம் முழுவதற்கும் பிராணனாக இருக்கிறாய். ஆனால் (பாமர ஜனங்கள்) என்னை இந்த ஜகத்திற்குப் பிராணனாகச் சொல்கிறார்கள். நீதான் எல்லோருக்கும் எப்போதும் கதி (ஸதாகதி) ஆனால் ஜனங்களோ என்னை ஸதாகதி அதாவது எப்போதும் (ஒரு இடம் என்றில்லாமல்) அசைந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வாறு ஜனங்கள் பிரலாபிப்பது எனக்கு (லஜ்ஜையை) வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. நான் என்ன செய்ய முடியும், என்னை (கைவிட்டு விடாமல்) ரக்ஷிப்பாயாக.

இவ்வாறாக வாயுதேவன் வியாகூலத்துடன் செய்யும் பிரார்த்தனைகள் பலிதமாகின்றன.

66. शङ्खोल्लासिगलोज्ज्वले समकरे पद्मेन कुन्दस्मिते
पादाग्राहृतकच्छपे मुखमहापद्मे मुकुन्दाश्रिते ।
इत्यस्मन्निधिगात्री नीलनयने चर्चात्मिके पाहि मा-
मित्थं पादनतिश्शिवे विजयते सख्युः कुबेरस्य ते ॥

சங்கோல்லாஸிகலோஜ்வலே ஸமகரே பத்மேன குந்தஸ்மிதே
பாதாக்ராத்ருதகச்சபே முகமஹாபத்மே முகுந்தாஸ்ரிதே
இத்யஸ்மந்நிதிகாத்ரி நீலநயனே சர்ச்சாத்மிகே பாஹிமாம்
இத்தம் பாதநதிச்சிவே விஜயதே ஸக்யு: குபேரஸ்யதே

சங்கரியே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் (வடதிசைக் காவலனான) குபேரன் பின்வருமாறு பிரார்த்திக்கிறார்.

சங்கம் என்ற நிதி ✱விளையாடுகிற கழுத்துடன் பிரகாசிப்பவளே! மகரம் பத்மம் என்கிற நிதிகளைக் கையில் ஏந்தியிருப்பவளே! குந்தம் என்ற நிதி போன்ற சிரிப்பைக் கொண்டவளே! ஸ்ரீபாதத்தில் பக்தியுடன் வீற்றிருக்கும் கச்சப நிதியையுடையவளே! மகாபத்மம் என்கிற நிதியைப் போன்ற வதனத்தையுடையவளே! முகுந்த நிதியினால் ஆச்ரயிக்கப்பட்டவளே! நீலம் என்ற நிதியை நயனமாகக் கொண்டவளே! வரா என்ற நிதியை வாசனைத் திரவியமாக சரீரத்தில் பூண்டவளே! இவ்வாறு ✱ நவநிதிகளையும் கொண்ட சரீரத்தையுடையவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக.

இவ்வாறாக உன் சிநேகிதனான ✱✱ குபேரனுடைய பிரார்த்தனைகள் (உன் அனுக்ரஹத்தினால்) பலிதமடைகின்றன.

குபேரனிடம் உள்ள நவநிதிகளாவன மகாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரா.

✱இந்த நவநிதிகளுக்கும் நாயகனாக என்னை ஜனங்கள் தவறாகச் சொல்கிறார்கள். நான் பெயருக்கு

மட்டும்தான் தனேசனே தவிர இந்த நவநிதிகளும் உண்மையாக உனக்குக் கட்டுப்பட்டவை தானே என்று தாத்பரியம்.

✱✱குபேரன் சிவபார்வதிக்கு சிநேகிதனென்றும் கைலாஸத்தில் நிரந்தரமாக வசிப்பதாகவும் சொல்லப் படுகிறது.

இன்னொரு அர்த்தம்:-

✱சங்கு விளையாடுகின்ற கழுத்துடன் பிரகாசிப்பவளே! பத்மம் போன்ற கோமளமான இரு கரங்களையுடையவளே! குந்த புஷ்பம் (மாதவிப்பூ) போன்ற சிரிப்புடன் பிரகாசிப்பவளே! ஸ்ரீபாதத்தில் வீற்றிருக்கும் ஆமையை உடையவளே! விகசித்த பத்மம் போன்ற முகத்தையுடையவளே! ஸ்ரீவிஷ்ணுவினால் ஆச்ரயிக்கப்பட்டவளே! நீலோத்பலம் போன்ற நயனங்களை உடையவளே! எல்லோருடைய இதயத்திலும் ஸங்கல்ப விகல்ப ரூபமாக இருப்பவளே! இவ்வாறாக் சரீரமே (தரிசிப்பவர்களுக்கு) நிதியாக இருப்பவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக.

67. सन्नामेषु भवत्पदाम्बुजनखच्छायां जटासङ्गिनीं
गङ्गेत्यालिजना वदन्ति वितथं मा भूर्मुधा कोपिनी।
दृष्टिं मय्यपनीयतां परुषमप्येकं वचो दीयता-
मीशानस्य भवानि ते पदनताविथं जयन्त्यर्थनाः ॥

ஸந்நாமேஷு பவத்பதாம்புஜ நகச்சாயாம் ஜடாஸங்கினீம்
கங்கேத்யாலிஜனா வதந்தி விததம் மா பூர்முதாகோபினீ
த்ருஷ்டிம் மய்ய பனீயதாம் பருஷமப்யேகம் வசோ தீயதாம்
ஈசானஸ்ய பவானி தே பதநதாவித்தம் ஜயந்த்யர்த்தனா:

பவானியே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் ஸ்ரீஈசானர் (வடகிழக்குத் திசைப் பாலகர்) இவ்வாறு பிரார்த்திக்கிறார். (பிரணயகலகத்தில்) உன் கோபத்தைத்

தணிப்பதற்காக நான் நமஸ்கரிக்கும் போது என் ஜடை மீது உன் பாத நகங்களின் பிரகாசம் படுகிறது. அதைப் பார்த்து விட்டு ஜனங்கள் எல்லோரும் கங்கை என்று பொய்யாகச் சொல்லுகிறார்கள். நீ அனாவசியமாகக் கோபித்துக் கொள்ளாதே. என் மேல் உன் பார்வையைச் செலுத்து வாயாக. கடுமையாகவேனும் ஒரு வார்த்தையாவது பேசுவாயாக.✸

இவ்வாறாக ஸ்ரீஈசானருடைய பிரார்த்தனைகள் பலிதமடைகின்றன.

✸கோபத்தினால் தேவி ஸ்ரீபரமேஸ்வரனிடம் பேசாமலும் பார்க்காமலும் இருந்ததாக அர்த்தம்.

68. नाभीतोऽभवमादितस्तव बलात् पश्चादभीतोऽस्म्यहं
त्र्यक्षेण त्रिमुखीकृतोऽपि चतुरास्योऽहं तवैव स्तवैः ।
त्वं विश्वात्मतयोपजन्य न पुनः स्रष्टारमाख्याहि मा-
मित्थं देवि जयन्ति ते पदनतौ वाणीपतेर्वाणयः ॥

நாபீதோபவ மாதிதஸ்தவ பலாத் பஸ்சாதபீதோஸ்ம்யஹம்
த்ர்யக்ஷேண த்ரிமுகீக்ருதோபி சதுராஸ்யோஹம் தவைவ ஸ்தவை:
த்வம் விஸ்வாத்மதயோபஜன்ய ந புன: ஸ்ரஷ்டாரமாக்யாஹிமாம்
இத்தம் தேவி ஜயந்தி தே பதநதெள வாணீபதேர்வாணய:

தேவியே! உன் ஸ்ரீபாதத்தில் நமஸ்கரிக்கும் (வாணீபதியாகிய அதாவது ஸரஸ்வதியின் பர்த்தாவாகிய) பிரம்மாவின் பிரார்த்தனைகள் வருமாறு:

நான் தோன்றும் போது பயமுள்ளவனாகத் தான் தோன்றினேன். (அல்லது நான் ஸ்ரீவிஷ்ணுவின் நாபி கமலத்திலிருந்து தோன்றினேன். நாபி கமலத்திலிருந்து தோன்றியமையால் உறுதியில்லாமையால் தோன்றும் போதே பயம் உண்டு) பின்னர் உன் அனுக்ரஹம் என்கிற பலத்தினால் நான் பயமற்றவனாக இருக்கிறேன். (முக்கண்ணனான) ஸ்ரீபரமேஸ்வரனால் நான் மூன்று

முகங்கள் உள்ளவனாக★ செய்யப்பட்டாலும் கூட உன்னுடைய ஸ்தோத்திரங்களைச் சொன்னமையால் நான் நான்கு முகங்கள் கொண்டவனாக இருக்கிறேன். (உன்னை ஸ்தோத்திரம் செய்து எல்லா வேதங்களையும் சொல்லும் சாதுரியம் எனக்கு கிடைத்தமையால் என் முகங்கள் பரிசுத்தமடைந்தன. வேதங்கள் உன்னால் உண்டு பண்ணப்பட்டிருந்தாலும் உபசாரமாகவே என்னைப் பற்றி ஜனங்கள் வேதங்களை உண்டு பண்ணியவனாக சொல்லுகிறார்கள் என்று தாத்பரியம்.

நீ இந்த பிரம்மாண்டம் முழுவதையும் உண்டு பண்ணி வியாபித்திருப்பவள். என்னை ஸ்ருஷ்டிகர்த்தா என்று நீ சொல்ல வேண்டாம் நீயே என்னை ஸ்ருஷ்டி கர்த்தா என்று சொன்னால் உண்மையறிந்த ஞானிகள் என்னைப் பரிகசிப்பார்கள். மேலும் அவ்வாறு நீ சொன்னால் என்னுடைய ரஜோகுணம் அதிகமாகி உன் ஸ்ரீபாதாரவிந்தங்களை நான் மறந்து விடவும் கூடும் என்று தாத்பரியம்)

இவ்வாறு பிரம்மாவின் வார்த்தைகள் (உன் அனுக்ரஹத்தினால்) பலிதமடைகின்றன.

★ஐந்து தலைகள் கொண்ட பிரம்மாவின் ஒரு தலையைத் துண்டித்தார் ஸ்ரீபரமேஸ்வரன். அதனால் அவர் நான்முகனாக ஆனார். ஆனாலும் பிரம்மா சாதுரியமாகப் பேசுகிறார் என்று அர்த்தம்.

69. आशीरस्ति मुखे विडम्बयति मां भूयोऽपि चाशीः स्पृहा
भोगाः सन्ति सहस्त्रधा पुनरहं भोगान् कथं प्रार्थये ।
शेषोऽहं स्पृहयाम्यशेषसुखमित्येतच्च हासास्पदं
नाथे चिन्तय सम्यगित्यहिपतेस्त्वत्पादपातो जयेत् ॥

ஆசீரஸ்தி முகே விடேம்பயதி மாம் பூயோபிசாஸீ: ஸ்ப்ருஹா
போகா: ஸந்தி ஸஹஸ்ரதா புனரஹம் போகான் கதம் ப்ரார்த்தயே

சேஷோஹம் ஸ்ப்ருஹயாம்யசேஷஸுகமித்யேதச்ச ஹாஸாஸ்பதம்
நாதே சிந்தய ஸம்யகித்யஹிபதேஸ்த்வத்பாதபாதோ ஜயேத்

ஈஸ்வரியே! உன் ஸ்ரீபாதத்தில் விழுந்து நமஸ்கரிக்கும் ஸ்ரீசேஷனுடைய பிரார்த்தனைகள் பின்வருமாறு:

எனக்கு வாயில் விஷப்பற்கள் (ஆசீ என்றால் விஷப்பற்கள் அல்லது ஸம்பத்து) இருக்கின்றன. (அல்லது எனக்கு ஆரம்பத்திலிருந்தே ஸகல மங்களங்களும் இருக்கின்றன) மறுபடியும் மங்களங்களையடைய வேண்டும் என்கிற ஆவல் என்னை பரிகாசத்திற் குள்ளாக்குகிறது. என்னிடம் போகங்கள் (அல்லது ஸர்ப்பங்கள்) ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. மறுபடியும் போகங்களுக்காக நான் எப்படி பிரார்த்திப்பேன். நானே சேஷன். நான் அசேஷமான (அதாவது) குறைவில்லாத சுகத்திற்கு ஆசைப்பட்டால் நான் மறுபடியும் பரிகாசத்திற்குத் தான் உள்ளாவேன். நீயே நன்றாக சிந்திப்பாயாக.✸ இவ்வாறாக ஸ்ரீ ஆதிசேஷனின் பிரார்த்தனைகள் பலிக்கட்டும்.

*தாயார் எவ்வாறு குழந்தையின் பிரார்த்தனையில்லாமலேயே குழந்தையின் சுகத்திற்காக காரியங்களைச் செய்வாளோ அது போல நான் சரணடையாவிட்டாலும் கூட ஜகன் மாதாவான உன்னால் பரிபாலிக்கப் பட வேண்டியவன். முன் சுலோகங்களில் சொல்லப்பட்ட இந்திராதி தேவர்கள் பிரார்த்தனைகளைச் செய்தார்கள். ஆனால் நானோ முன் சொன்ன காரணங்களால் பரிகாசத்துக்குள்ளாகக் கூடிய பயத்தினால் பிரார்த்தனையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். உன் ஸ்ரீபாதார விந்தங்களில் விழுந்து விட்ட நான் எவ்வாறாகிலும் உன்னால் ரக்ஷிக்கப்பட்டு விடுவேன் என்று பொருள் பட பேசும் ஸ்ரீஆதிசேஷனுக்கு இந்திராதி தேவர்களை விட வாக்கு சாதுர்யம் இருப்பது புலனாகிறது.

70. पार्वत्याः पदमत्र दृश्यमिति वा पादे भवत्वेन वा
साधुत्वात्तदुपास्तये हिततया पद्यान्यमूनि स्फुटम् ।
सैषा मुक्तिपुरीगिरीन्द्रतनयाभक्तेन नारायणे-
नाबद्धा खलु सप्ततिर्दिशतु वः कल्याणहल्लोहलम् ॥

பார்வத்யா: பதமத்ர த்ருச்யமிதி வா பாதே பவத்வேன வா
ஸாதுத்வாத்ததுபாஸ்தயே ஹிததயா பத்யான்யமூனி ஸ்புடம்
ஸைஷா முக்தி புரீகரீந்த்ரதனயாபக்தேன நாராயணே -
நாபத்தா கலு ஸப்ததிர்திசது வ: கல்யாணஹல்லோஹலம்

முடிவுரை (உபம்ஹார) ச்லோகம்.

இது வரை சொன்ன சுலோகங்கள் 'பத்யம்' என்ற இலக்கிய கட்டுப்பாட்டிற்கு ஏற்ப அமைந்துள்ளன (ஸமஸ்கிருத வியாகரணப்படி வார்த்தைகள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ரூடம், யோகிகம், யோக ரூடம் என்று. ரூடம் என்றால் ஒரு வார்த்தைக்கு பழைய வழக்கப்படி உள்ள அர்த்தத்தைக் கொண்டள்ளது. யோகிகம் என்றால் வார்த்தையின் இலக்கண ஆதாரத்தை வைத்து உள்ள அர்த்தத்தைக் கொண்டுள்ளது. யோகரூடம் என்றால் இலக்கண ஆதாரத்தை கொண்டு உள்ள அர்த்தம் ஒன்று, வழக்கமாக கொள்ளப்பட்ட அர்த்தம் ஒன்று என்று இரண்டு அர்த்தங்களைக் கொண்ட வார்த்தை. உதாரணமாக 'பங்கஜம்' என்றால் இலக்கண விதிப்படி சேற்றில் உண்டான எந்தப் பொருளையும் குறிக்கும். ஆனால் பரம்பரையாக உள்ள வழக்கப்படி பங்கஜம் என்றால் சேற்றில் உண்டாகும் தாமரையைத் தான் குறிக்கும். இது யோக ரூடம் என்ற வகையைச் சேர்ந்த வார்த்தை.

அது போல பத்யம் என்ற சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள் உள்ளன (1) ஸ்ரீபார்வதியினடைய ஸ்ரீபாதம் (அதாவது பதம்) எல்லா ஸ்லோகங்களிலும் தரிசிக்கக் கிடைக்கிறது.

(2) 'பத்யம்' என்ற சுலோக லக்ஷணத்திற்கேற்ப நான்கு பாதங்களை (வரிகளைக்) கொண்டுள்ளது. பதங்களைக் கொண்டு பத்யமாக அமைக்கப்பட்டுள்ளது.

(3) ஸ்ரீபாதத்தை உபாசிக்க (பக்தர்களுக்கு) சௌரியமாக உரைக்கப்பட்டுள்ளது.

இந்த ஸ்ரீபாத ஸப்ததியானது முக்திபுரியில் பிரகாசிக்கும் பர்வதராஜகுமாரியினுடைய பக்தனான நாராயணனால் ஆக்கப்பட்டுள்ளது. இது எல்லோருக்கும் ஸர்வ மங்களங்களையும் வாரி அருளட்டும்.✸

✸ஸ்ரீநாராயண பட்டத்திரி (கவி) பலஸ்ருதியாக இந்த சுலோகத்தை அமைத்துள்ளார்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	9	ஸ்ரீநாராயணீத்தைப்	ஸ்ரீநாராயணீயத்தைப்
6	12	வியாக்கினாத்தின்	வியாக்கியானத்தின்
7	13 (ஸ்லோ.)	இல	கில
8	7 (ஸ்லோ.)	வைர்தயைவ	வைரஸ்தயைவ
8	8 (ஸ்லோ.)	மூர்துனி	மூர்தனி
8	8 (ஸ்லோ.)	பாம்புஜம்	பாதாம்புஜம்
9	1 (ஸ்லோ.)	கம்	கிம்
9	7 (ஸ்லோ.)	தேவர்களுடைய	வேதங்களுடைய
9	24 (ஸ்லோ.)	க்ரீடாஸூஸ்	க்ரீடாஸூ
9	25 (ஸ்லோ.)	வர்வல்லீ	ஸ்வர்வல்லீ
10	28 (ஸ்லோ.)	தந்தவிடத்	தந்துவிடத்
11	11 (ஸ்லோ.)	நிதம்பபரா	நிதம்பபார
11	25 (ஸ்லோ.)	पद्मसामाश्रयं	पद्मसमाश्रयं
11	26 (ஸ்லோ.)	पद्मवींक्षण	पद्मवीक्षण
12	3 (ஸ்லோ.)	த்தாரிதர்ய	தாரித்ர்ய
12	21 (ஸ்லோ.)	பங்கஜவர	பங்கஜதர
14	1 (ஸ்லோ.)	पतिः	पति

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
54	15 (ஸ்லோ.)	कलहसमेत्य	कलहंसमेत्य
54	18 (ஸ்லோ.)	மஞ்ஜீரயோஸ்ய	மஞ்ஜீரயோஸ்ச
55	10 (ஸ்லோ.)	லாக்ஷாரத்துடன்	லாக்ஷாரஸத்துடன்
55	21 (ஸ்லோ.)	ததுநந்த	ததுந்நந்த
57	19 (ஸ்லோ.)	ப்ரபானகரிகம்	ப்ரபாகைரிகம்
59	20 (ஸ்லோ.)	पुत्रोऽस्यं	पुत्रोऽयं
60	13 (ஸ்லோ.)	ஹ்வயம்	ஹவ்யம்
60	15 (ஸ்லோ.)	ரக்னோகிர:	ரக்னோர்கிர:
61	16 (ஸ்லோ.)	ஸ்யாச்சேத	ஸ்யாசசேத
62	23 (ஸ்லோ.)	ப்ராத்தனா:	ப்ரார்த்தனா:
62	25 (ஸ்லோ.)	நிருகுதியின்	நிருதியின்
63	8 (ஸ்லோ.)	நிருகுதியின்	நிருதியின்
70	20 (ஸ்லோ.)	கரீந்த்ர	கிரீந்த்ர
71	1 (ஸ்லோ.)	உபம்ஹார	உபஸம்ஹார
71	19 (ஸ்லோ.)	ஸ்ரீபரர்வதி யினடைய	ஸ்ரீபார்வதி யினுடைய
72	2 (ஸ்லோ.)	சௌரியமாக	சௌகரியமாக

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்
2, விநாயகம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் - 24893736